எஸ் ஜோனின்

# யாழ்ப்பாணச் சரித்திரம்

## 1878

ஒரு மீள்வாசிப்பு

கலாநிதி க. குணராசா



எஸ். ஜோனின்

# யாழ்ப்பாணச் சரித்திரம்

S. John's

# History of Jaffna

**1878**

## ஒரு மீள்வாசிப்பு

தெல்லிப்பளை போதனா சக்தி
வித்தியாசாலை தலைமை
ஆசிரியராகவிருந்த

**எஸ் ஜே[illegible]ன்**

என்பவரால் ஆக்[illegible]ட்டு
டானியல் ஜோன் [illegible]
என்பவரால் ப[illegible]கப்பட்ட
யாழ்ப்பாணச் [illegible]திரமும்
அதற்கான வ[illegible]கமும்.

**கலாநிதி க. குணராசா**


கமலம் பதிப்பகம்,
யாழ்ப்பாணம்

- மீள் வாசிப்புப் பதிப்பு : டிசம்பர் 2002
- பதிப்புரிமை : திருமதி. கமலா குணராசா
  75/10A பிறவுன் வீதி,
  நீராவியடி,
  யாழ்ப்பாணம்.
- அச்சுப்பதிவு :
- வெளியீடு : கமலம் பதிப்பகம்.
- விலை : 100/=

- S. JOHN's
  YALPPANA CHARITTHIRAM,
  (History of Jaffna)
- Re. told by : Dr. Kandiah Kunarasa
  B.A. Hons. (Cey), M.A., Ph.D., SLAS
- Published by : Kamalam Pathippakam
- First Edition : 2002, December
- Price : Rs. 100/=

**விற்பனையாளர்:**

- **பூபாலசிங்கம் புத்தகசாலை,**
  கடற்கரை வீதி, கொழும்பு.
- **ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
  டயஸ் பிளேஸ், குணசிங்கபுர,
  கொழும்பு.

# முன்னுரை

யாழ்ப்பாணச் சரித்திரத்தை எழுதிய சிலரில், தெல்லிப்பளை போதனா சக்தி வித்தியாசாலையின் (Tellippalai Training School) தலைமை ஆசிரியராகவிருந்த எஸ். ஜோன் ஒருவராவார். யாழ்ப்பாண நாட்டின் வரலாற்றை பாடசாலை மாணவர்கள் தெரிந்துகொள்வதற்காக இந்நூல் ஆக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும், அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டிய விடயங்கள் ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரத்தில் உள்ளன.

ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரத்தின் முதற் பதிப்பு 1878 அம் ஆண்டு வெளிவந்தது. அந்நூலின் இரண்டாம் பதிப்பு 1882 ஆம் ஆண்டில், நான்கு வருடங்களின் பின்னர் பிரசுரமாகியது. இந்த இரண்டாம் பதிப்பின் பின்னிணைப்பாக யாழ்ப்பாணச் சரித்திரத்தின் பொழிப்பு ஆங்கிலத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. ஜோனின் புதல்வரான டானியல் ஜோன் என்பார் தந்தையின் யாழ்ப்பாணச் சரித்திரத்தை 1929ஆம் ஆண்டு மூன்றாம் பதிப்பாக வெளியிட்டார். அதனைத் தெல்லிப்பளை அமெரிக்கன் சிலோன் மிஷன் அச்சகத்தினர் பதிப்பித்துள்ளனர். அவரை மூன்றாம் பதிப்பு வெளியிடத் தூண்டியவர்கள் வரலாற்றறிஞர்களான ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையும் முதலியார் செ. இராசநாயகமும் ஆவர். அக்கால வேளையில் முற்குறித்த அறிஞர்களது யாழ்ப்பாணச் சரித்திர நூல்கள் அச்சு வாகனமேறியிருக்கவில்லை.

'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்ற இந்நூலை ஆக்க வேண்டிய அவசியம் குறித்து ஜோன் இரண்டாம் பதிப்பு முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்: ''அருமையான நமது தேச விருத்தாந்தம் யாழ்ப்பாணிகளின் செவியாகிய வாய்க்கு அமுதம் போல

மதுரமாயிருக்குமே: அதுபற்றிப் பிரத்தியேகமாய் புராதன சம்பவங்களடங்கிய யாழ்ப்பாண இதிகாசம் இயற்றுகவென்று தேசாபிமானம், கல்வி, செல்வம், மரபு முதலிய யாவற்றிற்கும் உறைவிடமும், தெல்லியம்பதி வாசகருமான ம. சுவாமிநாதம் பிள்ளை குமாரர், மண்டலநாயகம்பிள்ளை நொத்தாரிசுகள் வேண்டிய வேண்டுகோளின்படி, வைபவமாலை முதலாம் நூல்களையாதாரமாகக் கொண்டு அவற்றிற் தள்ளவேண்டிய தள்ளியும், கொள்ளவேண்டிய கொண்டும், சேர்க்கவேண்டிய சேர்த்தும் ஒரு புது நூல் இயற்றினம்".

எஸ். ஜோனின் 'யாழ்ப்பாணச் சரித்திரம்' முற்றுமுழுதாக மயில்வாகணப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலையின் தழுவலாகவிருப்பினும், அதில் விடுபட்டவற்றிற்கும், கூறப்பட்டவற்றிற்கும் விளக்கம் அவசியமென உணரப்பட்டதால் இந்த நூல் புதிய விளக்கங்களுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. 1878 ஆம் ஆண்டிற்குப் பின்னர் யாழ்ப்பாண வரலாற்றின் இருண்ட பகுதிகள் ஓரளவு தெளிவாக்கப்பட்டுள்ளன என்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும்.

இந்நூலினை தக்க முறையில் கணனியிலிட்ட திரு. ஆத்மானந்தனுக்கும், சிறப்பாக வெளியிட உதவிய திரு. சதீசுக்கும் என் நன்றிகள்.

**பிராந்திய ஆணையாளர்** **கலாநிதி க. குணராசா**
**யாழ்ப்பாணம்.**
**இலங்கை.**
**10.11.2003**

# பதிப்புரை

யாழ்ப்பாண வரலாற்றைக் கூறுகின்ற அனைத்துப் பழைய நூல்களையும் புதிதாகப் பதிப்பித்துத் தமிழ் கூறும் நல்லுலகிற்குச் சமர்ப்பிக்க முன்வந்துள்ளோம். அவ்வகையில் மிகப் பழைய வரலாற்று ஆவணமான மாதகல் மயில்வாகனப்புலவரின் ‘யாழ்ப்பாண வைபவமாலை’யையும், அதனையடுத்து அறிஞர் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையின் ‘யாழ்ப்பாணச் சரித்திர’த்தையும் வெளியிட்டோம். இப்போது எஸ். ஜோனின் ‘யாழ்ப்பாணச் சரித்திரம்’ மீள் வாசிப்புடன் வெளிவருகின்றது. தமிழ் கூறும் நல்லுலகம் இந்த முயற்சிகளை வரவேற்குமென நம்புகின்றோம்.

10.11.2003 கமலம் பதிப்பகத்தினர்

## அதிகாரம் 1

# பூர்விக சரித்திரம்

### இறைவணக்கம்

சீரம ரிலங்கா சிரமென யாருஞ் செப்பிடத்தகு மியாழ்ப்பாணப்
பேரமர் பதியின் பெருமிதச் சரிதம் பிள்ளைகடானு நன்குணர
ஏரமர் வசன நடையதாயியற்ற வெந்தையே தமியனென் மீதே
பார்மர் பாவ நாசராயுதித்த பரம நின்கருணையீந் தருளே.

### புராதனம்

கன்னலுங்கமுகுமிக்க கதலிகள் வருக்கைமாக்கள்
நன்னயராசவள்ளி யாதிநற்பவ மூலங்கள்
தென்னைகற்பகநேர்தாலந் திருவுறுசெந்நெலோங்கும்
பன்னருவள யாழ்ப்பாண பதிப்புராதனத்தைச் கேண்மோ.

# யாழ்ப்பாணக் குடாநாட்டின் தோற்றம்

வெள்ளிய சரிகையிளைத்த நீலாம்பரம் போலிலங்குந் திரையெறியாநின்ற பங்காளச் சமுத்திரத்தையும் அதன் பகுதிகளையும் ஆடையாயுடுத்து, உப்பாற்றை யுத்தரீயமாயிட்டு விளங்கும் யாழ்ப்பாண நங்கையினுற்பத்தி ஸ்திதியை நோக்குங்கால், மிகவினோதமு மதியாச்சரியமுமாயிருக்கின்றது.

இலங்காபுரியினுத்தரதிசையிற் சமுத்திரத்துளிருந்த திடர்களையடைந்த மயிர்முனைப் பிரமாணமான எண்ணற்ற பவளப்பூச்சிகள், வருணனைக் கடங்காவடிவுடைய மாளிகையாக அந்திசந்தி யாயாசமின்றி யிடைவிடாது நெடுங்கால பிரயாசத்தினாற் றடக்குறைவிடமாகக் கட்டியெழுப்பிய முருகைக்கற்பார், திரையால் மோதுண்டு தகர்ந்துவிழவிழ, அதிலிருந்து அனந்தரங் கட்டியெழுப்பப்பட்ட கற்பார் விசாலித்து அலைக்கரத்தாலும், நீரோட்டக்காலாலுஞ் செப்பனிடப்பட்டுத் துகளாயும் மணலாயும்பரவி நாடாயிற்று. இந்நாட்டினு தரக்கனிகள் போல விளங்கும் ஊர்காவற் றுறைத்தீவு, காரைதீவு, எழுவைதீவு முதலாஞ் சத்ததீவுகளும் இவ்வகையே உற்பத்தியாயினவென்பதற்கு அதனதன் கரைகளிற் காணப்படும் பவளப்பூச்சிப்பார்களே சான்றாகும்.

இந்தியம், இலங்கை என்னுமிடங்களிலிருந்து வாயுபகவானும், வருண பகவானுந் தத்தஞ் சாமர்த்தியத்தாற் கொணர்ந்து பரப்பிய இனமினமான தாவரவகை வித்துக்கள் ஆங்காங்கு முளைத்து வளர்ந்து விருத்தியாகி மரச்செறிவுள்ள காடாயிற்று. இலங்கையிலுள்ள யானை, கரடி, புலி முதலாந் துட்டமிருகங்கள் வந்து 'பூனையில்லா வீட்டிலெலி துள்ளி விளையாடி'னாற் போல மரச்சோலையிற்றங்கித் தழைகளை யுண்டு, தடாகங்களில் நீர்பருகிக் களிகொண்டு, 'அரசனில்லாப்படை' போலாடித் திரிந்தன. வகைவகையான மயில், குயில், புறா முதலாம் பட்சிசாலங்களும்

தருக்களின் சினைகளில் வாசம் பண்ணிக் காய்கனியுண்டு கானம்பாடி யச்சபயமற்று வாழ்வுற்றிருந்தன.[1]

## நாட்டுவளம்

நாட்டுச்சீர் சிறப்பையும், பொருள் வருவழியையுமுண்டாக்கும் மலைவள ஆற்றுவளங்கள், இலங்கை இந்தியம் முதலாமிடங்களைப் போலில்லை யென்னாமல், அவற்றின்பேராவது உச்சரிக்கும் பாக்கியமாக இந்நாட்டின் வடமேற்பக்கத் தோர் மலையென்று சொல்லப்படுஞ் சிறுத்திடரும்,[2] அதனருகே சமுத்திரத்திற் பாயுமோர் நன்னீரருவியுமுண்டு.[3] அந்நீரருவி சமுத்திரத்தோடு சம்பந்தமாயிருப்பதையிட்டுக் கசம், ஈளை, மெலிவாகிய சிலவித ரோகமகற்றும் அருமருந்தொப்பப் பிரயோசனப்படுவதால், முற்காலத்து அயற்றேசவாசிகளான சில பிணியாளர் இங்ஙனம் வந்து,[4] இந்நாட்டுக்கு எருமை முல்லைத்தீவென நாமமிட்டு மலைக்கயலில் வாசம் பண்ணி, சமுத்திரத்திற் படிந்து வருஞ் சுத்தவாயுவைச் சுவாசித்து, அந்நீரருவி யில் ஸ்நானபானஞ் செய்து சுகம் பெற்றனர். தற்காலத்திங்குள்ள பிணியாள ரும்பலர் அப்படிச் செய்து சுகம் பெறுகின்றனர். அவைகட்கணித்தாயஇடம் திருத்தம்பலைப் பதியெனப்[5] பெயர் பெற்றது.

---

1. யாழ்ப்பாணக் குடாநாடு சுண்ணாம்புக்கல் அடையல்களாலும், முருகைக்கற்பாறை களினாலும் உருவாக்கப்பட்டதென்பது ஏற்றுக் கொள்ளத்தக்கவையாம். இலங்காபுரியும் இந்தியாவும் தோன்றிய பின்னரே, யாழ்ப்பாணக்குடாநாடு உருவாகியது என்பது இன்று புவிச்சரிதவியலாளர்களால் விளக்கப்படும் உண்மையாகும். இந்தியாவின் ஒரு பகுதியாக விளங்கிய இலங்கை, கொண்டு வானாலாந்து எனப்படும் ஆதிக்கண்டத்தின் ஒரு பகுதியாகும். இந்தியாவிலிருந்து பிரிந்து, தென்கிழக்காக நகர்ந்து சென்றதன் பின்னர், மயோசீன் என்ற காலத்தில் கடலின் கீழ் அடையல்களாகப்படித்திருந்த சுண்ணக்கல் அடையல்கள் நீர்மட்டத்தின் மேலுயர்த்தப்பட்டு யாழ்ப்பாணக்குடாநாடாக மாறின என்பது புவிச்சரிதவிய லறிஞர்களின் கருத்தாகும். ஜோனின் கருத்துக்கள் நவீன கருத்துக்களோடு பொருந்துகின்றன.

2. கீரிமலை

3. கீரிமலைத் தீர்த்தக்கேணி

4. கீரிமுகம் கொண்ட நகுலமுனிவரும், குதிரை முகம் கொண்ட மாருதப்புரவல்லியும் இப்புனித தீர்த்தத்தில் நீராடித் தமது ஊனம் விட்டொழிந்தனரென்பது ஐதிகம்.

5. நகுலேஸ்வரர் கோயில்.

## கண்டகி தீர்த்தம்

பூர்வ காலத்திற் சிவன் பார்வதி சமேதராய் இவ்விடம் வந்து திருத்தம்பலைப் பதியில் வாசம் பண்ணினார். அப்போது தமது பாரியாகிய உமையவள் ஸ்நானம் செய்வதற்காய்க் கண்டகிதீர்த்தத்தை[6] இவ்விடமழைத்து வைத்தனரென்றும், அதிற் தேவுக்களும் இருஷிகளும் பிறரும் வந்து தீர்த்தமாடிப் புண்ணியவான்களாய்ப் போயினரென்றும், அக்காரணத்தால் இந்த நாடு புண்ணியபுரமென்று அழைக்கப்பட்டதென்றும் சொன்னார். அவ்விடத்தே திருத்தம்பலேசுவரன், திருத்தம்பலேசுவரி கோவில்களும் அவைக்கருகிற் கதிரையாண்டவர் கோயிலும் கட்டப்பட்டிருந்தன.

## வளவர்கோன் பள்ளம்

இந்நாடு காடாயிருந்தமையால், பின்னொரு காலத்தில் கீர்த்திப்பிரஸ்தாபரான மூவேந்தருள் ஒருவனான சோழராசன், சதுரங்க சேனையோடு இவ்விடம் வந்து, தானும் தன் பரிவாரத்தவரும் தங்குதற்கேற்ற வசதியான கட்டிடங்களாக்கி வாசம் பண்ணி, வேட்டையாடியும் சிற்றாற்றில்[7] ஸ்நானம் செய்தும், சிலகாலம் பொழுது போக்கித் தன்னாடு சென்றான். அவ்விடம் வளவர்கோன் பள்ளம்[8] எனப் பெயர் பெற்றது.

## நகுலமுனி

மற்றொருவரைப் பணியாது தரணியாண்ட அறுசக்கரவர்த்திகளில் ஒருவனான முசுகுந்தன் காலத்தில் அவனும், கீரிமுக ரோகத்தவனாயிருந்தமையால் நகுலமுனி[9] எனப் பெயர் பெற்ற தபதியும் கூடி வந்து,

---

6. இந்தியாவில் யமுனாநதியின் பிரதான கிளை நதி கண்டகி ஆகும். யாழ்ப்பாணத்து மன்னர்கள் யமுனாநதியைப் புனித தீர்த்தமாகக் கொண்டனர். கங்கை நதியின் ஒரு கிளை யமுனை ஆகும். யாழ்ப்பாண மன்னனான சிங்கைப்பரராசசேகரன் யமுனை நதியின் நீரைத் தருவித்து, யமுனாஏரி என்ற பகரவடிவ கூபகத்தைக் கட்டுவித்து, அதனுள் பெய்தான் என்பது வரலாறு.

7. கீரிமலைத் தீர்த்தம்.

8. மாவிட்டபுரப் பகுதியில் வளவர்கோன் பள்ளம் என்றழைக்கப்படுமிடமுள்ளது.

9. நகுலமுனியின் கதையை முதன்முதல் மயில்வாகனப்புலவர் தனது 'யாழ்ப்பாண வைபவமாலை' என்ற நூலில் பயன்படுத்தியுள்ளார். கீரிமலையின் பெயர்த்தோற்றத்தை தாபிக்க இக்கதை கர்ணபரம்பரையாக வழங்கி வந்திருக்க வேண்டும்.

சக்கரவர்த்தி தீர்த்தமாடித் தன்னகர் செல்ல, நகுலமுனி மலைக்குகையைத் தன் அரணாக் கிக் கொண்டு அவ்விடமிருந்தான். அதனால் அம்மலை நகுலகிரி எனப்பெயர் பெற்றது. (நகுலம் = கீரி, கிரி = மலை) முனிவர் அவ்விடமிருந்த சிற்றாற்றில் ஸ்நானம் செய்யக் கீரிமுகரோகம் மாறிச் சிறந்த வதனத் தனாயினன் என்பர்.

## வீணாபுரம்

முனிவர் இவ்வண்ணம் இருக்க இலங்காபுரியிலுள்ள இராட்சதர்களை அரசாண்ட இராவணனது கரசிரங்கள் இராமனால் கொய்யப்பட்டபோது இராவணன் வீணை வாசிக்க நெடுங்காலமாக யாசித்திருந்த சித்திராங்கன் என்னும் கந்தருவன் அவ்வீணையைக் கையாடிக் கொண்டு வந்து கீரிமலைச் சாரலில் வந்து தங்கி, வீணாபாணியாய்க் கானம்பாடி ஏகாந்தமாய் மகிழ்வுற்றிருந்தான். அஃதன்றி 'முயற்சியுடையோன் எவற்றையும் வெல்வன்' என்னும் முதுமொழிக்கிணங்க அதிபிரயாசையோடு அவ்விடக் காட்டை வெட்டிச் செப்பனிட்டு நாடாக்கினான். அக்காலத்து இந்நாடு காந்தருவ நகரமென்றும் வீணாகராக்கியமென்றும் அழைக்கப்பட்டது.[10].

## நளச்சக்கரவர்த்தி

ஏழு வள்ளலிலொ ருவனும் நிடத நாட்டரசனுமாகிய நளச் சக்கரவர்த்தி சூதும் வாதும் வேதனை செய்யும் என்னும் ஔவை வாக்கை மறந்து, புட்கர ராசனோடு சூதாடித் தன்னாடு, நகர், யானை, சேனை யாவுந் தோற்று சுற்ற மித்திரரை விட்டு வந்து வனவாசஞ் செய்த காலத்தில் இங்கு வந்து ஸ்தல தரிசனம் செய்து, ஸ்நானமாடிக் கலி தொலைத்துத் திரும்பினனென்றும், பொறைக்குன்றான தருமராசனின் தம்பி அரிச்சுனன், தீர்த்த யாத்திரை செய்த போது இத்தலம் வந்து தீர்த்தமாடிப் போயினனென்றும் இதிகாசம் கூறும்.[11]

10. யாழ்ப்பாணத்தின் இன்னொரு பெயர் 'வீணாகானபுரம்' என்பதாகும். அது வீணை வாசிப்பதில் பிரியனான இராவணனுடன் தொடர்புபடுத்திய இன்னொரு கர்ணபரம்பரைக்கதை, யாழ்ப்பாணன் யாழ் வாசித்து யாழ்ப்பாணத்தைப் பரிசாகப் பெறுவதற்கு முதல், அவன் பெயரால் யாழ்ப்பாணம் என்ற பெயர் வருவதற்கு முதல், யாழ்ப்பாணம் யாழ் (வீணை) உடன் தொடர்புபட்டிருந்துள்ளது. பெயரின் காரணத்தை விளக்கமுயன்றவர்களின் கற்பனை வளமானது.

11. தீர்த்த யாத்திரை வந்த அர்ச்சுனன், அரசியாக விளங்கிய அல்லியை மணந்து கொண்டானெனப் புத்தளப்பகுதியில் வழக்கில் ஒரு கதையுள்ளது. உடப்புப்பகுதியில் உள்ள கோட்டை எச்சங்களை அல்லியரசாணியுடன் தொடர்பு படுத்துவர்.

## வெடியரசன்

அக்காலத்திலே இந்நாட்டுக் குடிபதிகளாயிருந்த வெடியரசனென்னும்[12] குகனும் அவன் சகோதரராகிய வீரநாராயணன், விளங்குதேவன், போர்வீர கண்டன், ஏரிலங்குருவன் என்னும் நால்வரும், சிற்றரசர்களாய் அங்கங்கிருந்தார்களென விளங்குகின்றது. இவர்களைக் கிருட்டினன் புத்திரரென்பர். இவர்களில் வெடியரசன் நெடுந்தீவில் கோட்டை கொத்தளங் களைத் தாபித்துத் தீவுப்பற்றுக்களை தனதடிப்படுத்தி, அரசியலுக்குரிய படைபடைக்கலங்களுடன் இராச்சியம் பண்ணினான். வெடியரசன் கோட்டை தற்காலம் அழிந்து கிடப்பதை அத்தீவின் மேற்குப் பகுதியில் காணலாம். வீரநாராயணன் பொன்னாலை முனைப்புறத்து எலுமிச்சைமலையிற்றனக்கும் தன் பரிவாரத்தவர்க்கும் ஏற்ற கட்டிடங்களைக் கட்டி, தனதாணை செலுத்திக் கிருட்டினர் கோயிலை[13] ஸ்தாபித்துப் பிரஸ்தாபமுற்றிருந்தான். அவ்விடத்திலுள்ள சதுரங்கமணல், மாளிகையடைப்பு முதலாமிடங்களும் கட்டிடக் குறிகளும், கண்டெடுக்கப்படும் பூர்வ பொன் நாணயங்களும், அவ்விடமிருந்த அட்டோலிக்கங்களைக் காட்டுகின்றன. விளங்குதேவன் சுளிபுரத்தின் வடபகுதியிலுள்ள திருவடிநிலையிலும்[14] போர்வீரகண்டன் கீரிமலை யிலும், ஏரிலங்குருவன் மயிலிட்டித் துறைப்பகுதியிலும், தத்தம் பரிவாரத்தோடு அவ்வப்பகுதிகளை ஆண்டிருந்தார்களெனப் பூர்வ சரித்திரமுண்டு.

## மீகாமன்

இவர்கள்காலத்திலே காகுந்தி புதல்வனான மீகாமன், மானாகரென்னும் வணிகேசன்மகள் கண்ணகைக்குப் பாதச்சிலம்பு செய்தற்கேற்ற நகாரத்தினம் வாங்க, காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து சோழமண்டலத்தரனுடைய அனுமதி பெற்று மரக்கலங்கள் அணியணியாய் பின் செல்ல, நயினாதீவென்று

---

12. வெடியரசன் வரலாறு கர்ணபரம்பரையாக விளங்கி வரும் கதையாகும். வெடியரசனின் கதையையும் புகழையும் பாடும் நாட்டுக்கூத்துக்களுள்ளன.

13. பொன்னாலைக் கிருஷ்ணன் கோயில்.

14. 'திருவடிநிலை' என்ற பெயர் சிவனின் பாதம் பதிந்ததால் வந்ததென்று ஜோன் கூறுகிறார். அவ்வாறான இன்னொருவிடம் சிவனொளிபாதமலையெனவும் கூறுகிறார். இலங்கைக்கு வெள்ளரசமரத்தோடும், பௌத்தத்தோடும் விஜயம் செய்த சங்கமித்ததேரி வந்திறங்கியதால். இப்பெயர் வந்ததென்பாருமுளர்.

சொல்லப்படும் நாகதீவை[15] நோக்கி வந்தான்.

## யுத்தம் வெடித்தது

அத்தீவு வெடியரசனுடைய ஆளுகைக்குட்பட்ட இடமாதலால் அவனுடைய காவற்சேனாதிபதி. மீகாமனையும் அவனுடன் வந்தவர்களையுந் தடுத்து மறித்து, வந்தவரலாற்றை வினவி, அவன் வரவையும் நோக்கத்தையும் வெடியரசன் செவிக்கேறச் செய்தான். வெடியரசன் இதைக் கேட்டவுடன், சீற்றங்கொண்ட சிங்கேற்றின் கர்ச்சிதம் போலார்பரித்துத் தனது சேனையோ டிவனை யெதிர்த்து, 'என் பெயரைக் கேட்டிருக்கவில்லையா? எனதாச்சிர மத்துள் வந்த உன்னைத் தப்பவிடேனென்று ஆக்கிரமித்து ஆயுதபாணி யானான். மீகாமனும் பூனை போலொடுங்கித் தனது நோக்கத்தை வெளியிட்டும் வெடியரசனின் மனமிளகாதது கண்டு புலிபோலெழுந்து யுத்தக்கால் தொடுத்தான். இரு பகுதியிலுள்ள சேனையும் ஒன்றுடனொன்று காடையும் புழுதியுமாய் வெட்டியும் குற்றியும், முட்டியும் தாக்கியும் தலைவேறு உடல்வேறு கால்வேறு தோள்வேறாய் பிளந்தெறிந்தும் போராடினர். முடிவில் மீகாமன் வெடியரசனைப் பின்னிடச் செய்து அவனைக் கொல்லாமற் சிறைபிடித்துப் பாய் மரத்தோடு கட்டி வைத்தான். அச்செய்தியறிந்து அவன் மனைவி நீலகேசி, தன் மைத்துனனாகிய வீரநாராயணனுக்குத் திருமுகமூலமாய்ச் செய்தியனுப்பினாள்.

## வீரநாராயணனும் தம்பிமாரும்

அத்தருணம் வீரநாராயணன் வட்டுக்கோட்டை கோட்டைக்காடு

---

15. இலங்கையின் வடபகுதி 'நாகதீவு' என வழங்கப்பட்டதென்பது புராதன வரலாறு. நாகர்கள் வாழ்ந்ததால் இப்பகுதி அப்பெயர் பெற்றது. இலங்கையின் வடபகுதிக்குரியதாக விளங்கிய 'நாகதீவு /நாகதீபகம் எனப் பெயர்பெற்று காலகதியில் யாழ்ப்பாணக்குடா நாட்டையும் அதன் அயற்தீவுகளையும் குறிப்பதாக மாறிப் பின்னர் நயினாதீவுக்கு மட்டுமுரியதாக மாறிவிட்டது என்பது அறிஞர்தம் கூற்றாகும். நாகதீவு முன்னர் பெரும் நிலப்பரப்பாகவிருந்தது என்றும், அது கடலினுள் அமிழ்ந்து போனதன்பின்னர் எஞ்சிய பகுதியே நயினாதீவு ஆகுமென்பது ஜோனின் கருத்தாகும். இலங்கைத் தீவின் தென் பெரும்பகுதி தாமிரபாணி என்றழைக்கப்பட்ட வேளையில் வடபகுதி நாகதீபம் அல்லது நாகதீவு என்று வழங்கப்பட்டுள்ளது. நாகதீபம் என்ற பிரதேசம் இலங்கையின் இன்றைய வடமாகாணத்தைக் குறிப்பதாக கெய்கர் குறித்துள்ளார். மதவாச்சிக்கு வடக்கேயுள்ள பகுதியே நாகதீபம் என்று செலிக்மன் கருத்து. இலங்கையின் வடபகுதியே நாகதீபம் என்பது பாக்கரின் முடிவாகும்.

முதலாங்காடுகளில் வேட்டையாடப் போயிருந்தான். தூதர் அஃதறிந்து, அவ் விடஞ்சென்று, ஓலைவழியாலும், வாய்மொழியாலும் வெடியரசனுக்கு நேரிட்ட விபத்துக்களை அவனுக்கு விபரித்தனர். அவனோ கோபாவேசங் கொண்டு தனது தம்பிமார் மூவருக்கும் இச் சமாசாரம் அறிவிக்கும்படி தூதரை அனுப்பி, 'இதோ! மாற்றான் துடுக்கடக்கி யவனாவியெடுக்கிறே னென்று சபதங் கூறித் தன்சேனை போருக்காயத்தமாகும்படி முரசையறி வித்து, சேனைகளைச் சேர்த்துக் கொண்டு ஆயுதபாணியாய் மரக்கலமீ தமர்ந்து நாக தீவை நோக்கி நடந்தான். அவ்விடத்தே தன் கருமத்திற் கண்ணாய் நின்ற மீகாமனும், தன் சேனை போருக்காயத்தமாகும்படி செய்தான். உடனே கடலிரண்டுபட்டதென இருபகுதிச் சேனையும் ஒன்றொ டொன்று கொதித்துப் பொங்கிச் சீறி, தண்டம், ஈட்டி, வாள், வல்லயம், வேல், அம்பு முதலாம் ஆயுததாரிகளாகி, அடித்தும், குற்றியும், வெட்டியும், பிளந்தும், இரத்தவாறு கடலையும் பிரித்துச் செல்லத்தக்கதாய்க் கடும் போர் புரிந்தனர். போர் புரிந்த போது வீரநாராயணனேவிய பாணத்தால் மீகாமன் மூர்ச்சித்து வீழ்ந்தும், அவன் ஆயாசம் தெளிந்து எழுந்து மறுபாணத்தை யேவி வீரநாராயணன் மார்பைப்பிளந்து அவனாவியை மண்ணுலகொருவச் செய்தான். திருவடிநிலை, கீரிமலை, மயிலிட்டி, என்னுமிடங்களிலிருந்து விளங்குதேவன், போர்வீரகண்டன், ஏரிலங்குருவ னென்றும் மூவருந் தத்தஞ் சேனையோடு வந்து, மீகாமனோடு சமராடத் தொடங்கினர். கோடைகாலக் கருமேக மிடித்து மின்னியும் வாதராயனா லள்ளுண்டு மழையின்றி வெளிறினாற் போல, வெடியரசனுடைய சம்மதப்படி போர் செய்யாது விட்டு, மீகாமனோடு சமரசப்பட்டு, அவனுக்கு விரும்பியபடி நாகரத்தினமுங் கொடுத்து வழிவிட்டனுப்பினர். அந்நாட்களில் வெடியரசன் வமிசத்தாரான[16] முற்குகரிற் பலர் நெறி கெட்டு, மட்டக்களப்பு முதலாம் இடங்களுக்குச்சென்று வாசம் பண்ணினார்களளெனக் கடலோட்டு வெடியரசன் சரிதம் முதலாம் நூல்களிற் காணலாம்.

## விசயன்

இப்படியே சிலகாலம் யாழ்ப்பாண நிலையிருக்க, கிறிஸ்துவுக்கு 544

---

16. முற்குகர் என்பவர் மீனவ குலத்தவர்களாவர். ஜோனின் கருத்துப்படி, முன்னர் குகைகளில் வாழ்ந்தவர்கள் என்பதாகும். கீரிமலை ஆலயங்களில் மீன்களைக் காயப் போட்டதற்காகப் பாண்டு மன்னனால் முக்குகர் துரத்தப்பட்டரென்பது யாழ்ப்பாண வைபவமாலை தரும் செய்தி.

வருடங்களின் முன், லாடதேசவரசனாகிய சிங்கவாகுவின் குமாரனான விசயன்[17] தன் பிதாவினாலூர்விட்டுத் துரத்தப்பட்டான். அவன் மகதநாட்டரச னாற் தமது நாட்டிலிருந்தகற்றப்பட்டுத் தேசாந்திரிகளாய்த் திரிந்த புத்த சனங்களை அழைத்து வந்து, இலங்கையிற் குடியேற்றித் தானே இராசரீகம் பண்ண ஆரம்பித்த காலத்தில், தனது இராச்சியத்திற்குப் பாதுகாப்பாகக் கீழ்த் திசைக்குத் தம்பலகாமத்திற் கோணேசர் கோவிலையும், தென்திசைக்கு மாத்துறையிற் சந்திரசேகரேச்சுரன் கோவிலையும், மேற்றிசைக்கு மாதோட்டத்திற் திருக்கேதீச்சுரன் கோவிலையும் எழுப்பி, வடதிசைக்குக் கீரிமலைப்பக்கத்திற் பழுதுபட்டுக் கிடந்த திருத்தம்பலேசுரன், திருத் தம்பலேசுவரி, கதிரையாண்டவர் கோவில்களையும் புதுப்பித்து பூசனை யியற்றக் காசியிற் பிராமணனாகிய நீலகண்டாசாரியரின் மூன்றாங்குமரன் வாமதேவாசாரியரையும் அவர் பன்னியராகிய விசயலட்சுமியம்மாளையும் அழைப்பித்து, அக்கிராரம் முதலிய வசதிகள் பண்ணி அவ்விடமிருத்தினான். அக்கிராமங் கோவிற்கடவை யென்றழைக்கப்பட்டது. கோவில்கள் புதுப்பிக்கப்பட்டபின் நகுலமுனி யவ்வாலயங்களிற்றங்கி வழிபட்டு வந்ததாற் திருத்தம்பலேசுவரன் கோவிலை நகுலேசர் கோவிலென்றும், திருத்தம்பலேசு வரி கோவிலை நகுலாம்பிகையம்மன் கோவிலென்றும் அக்காலத்துள்ளார ழைத்து வந்தார்கள். விசயராசனுந் திருப்பணி நிறைவேற்றியபின்னர் தனது ராச்சியத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு கதிரைமலைக்குப் போனான்.[18]

## முக்குகர் அடாவடித்தனம்

அக்காலத்தில் குகன் வமிசத்தாரான முற்குகத்தலைவரின் கீழாகச் சில வலைஞர், கீரிமலைப்பக்கத்திற் கடற்கரையோரமாய் வாசம்பண்ணி

17. விசயனின் வரலாறு சிங்கள வரலாற்றுப் பனுவலான மகாவம்சத்திலுள்ளது. விசயனும் அவனது தோழர்கள் எழுநூறு பேரும் தாமிரபர்ணி எனப்படும் இலங்கையின் மகா ஓயாவுக்கும் தெதுறு ஓயாவுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் கரையிறங்கினர் என்பதும், குவேனி எனும் இயக்க ராணியை விசயன் மணந்து கொண்டான் என்பதும், பின்னர் இருபிள்ளைகளுடன் குவேனியைத் துரத்திவிட்டு பாண்டிய இளவரசி ஒருத்தியை மணந்துகொண்டானென்பதும் மகாவம்சம் தரும் வரலாற்றுக் கதைகள்.

18. 'கதிரைமலை' என்பதைத் தென்னிலங்கையிலுள்ள கதிர்காமம் என்றும், அவ்வாறன்று கதிரைமலையென்பது கண்டிப்பிரதேசம் என்றும் வரலாறு எழுதியோர் கூறிச் சென்றுள்ளனர். கதிரைமலை என்பதும் கதிறுகொட என்று அழைக்கப்பட்டதுமான பிரதேசம் உண்மையில் கந்தரோடை யாகுமெனத் துணியலாம். கந்தரோடை எனத் துணியும் போதுதான் பின்னால் வரும் சரித்திர உண்மைகள் பொருத்தமானவையாவதைக் காணமுடியும்.

மீன்பிடித்து வருமானம் பண்ணினார்கள். அவர்கள் வாசம் பண்ணின இடங்கள் உசுமன்துறை சேந்தான்களமெனப் பெயர் பெற்றன. இந்த வலைஞர் மீன் பிடிக்கச் சிங்களவர் சிலர் வந்து வாங்கிக் காயப் போட்டுக் கருவாடாக்கிக் கண்டி முதலிய இடங்களிற் கொண்டு போய் வியாபாரம் பண்ணினார்கள். விசயராசன் மரித்தபின் 'ஆளிடங்கண்டு தோணி மேற்பட்டாற்' போல சிங்களவர் நிழற்சார்புநாடிக் கோவிற் பிரகாரங்களில் மீன் காயப் போடவுங் கோவிற் கிணறுகளிற் தண்ணீரள்ளவுந் தொடங்கினார்கள். சிங்களவரின் மிடுக்கான நடையைக் கண்ட பிராமணர் கோவிற் பூசைகளை நிறுத்திக் கதவுகளைப் பூட்டிக்கொண்டு அப்புறம் போய் ஒதுங்கியிருந்தனர்.[19]

## பாண்டுவசு

கிறிஸ்துவுக்குப்பின் ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கையை அரசாண்ட பாண்டுவசு[20] என்னுமரசன் இவ்விடம் வந்தபோது சிங்களவரின் அதிக்கிரமக் கிரியைகளை அறிந்து, அவர்கள் துடுக்கடங்கத் தண்டித்தும், முற்குகரை அவ்விடம் விட்டுத் துரத்தியும் விட்டான். அவர்கள், சுளிபுரம்[21], தொல்புரம்[22] முதலிய இடங்களிற் போய்க் குடியேறினார்கள்.

## குளக்கோட்டன்

இப்பூபதியின் காலத்திற்றான் மனுநீதிகண்ட சோழனின் மகன் குளக் கோட்டரசன் யாத்திரைசெய்து, திருகோணமலைக்கு வந்து கோணேசர் தரிசனஞ் செய்து, அவ்வாலயப் பழுதுபார்ப்பித்துத் திருப்பணிநிறைவேற்றி அவ்வாலயப்பூசாகிருத்திய வரவுசெலவுக்காக அடங்கற்பற்றென்னுஞ் சத்த கிராமங்களில் வயல்களுந் தோப்புகளுமுண்டாக்கி, அவைகளைப் பராமரிக்

---

19. வெடியரசன் கதையிலும் இவ்வாறான நிகழ்வு இடம் பெறுகிறது.

20. மகாவம்சத்தின்படி, விஜயன் மரணத்திற்குப் பின்னர் பாண்டுவாசுதேவா என்பவன் அரசாண்டான் என்பதாகும். ஜோனும் வைபவமாலையார் குறிப்பிடும் பாண்டுவசுவும் பாண்டுவும் இந்தப் பாண்டுவாசுதேவர் எனக் கொள்ளலாம். இவன் ஜோன் குறிப்பிடுவதுபோல கிறிஸ்துவுக்குப் பின் ஐந்தாம் நூற்றாண்டில் அரசாளவில்லை. கிறிஸ்துவுக்கு முன் 444-414 ஆகிய இடைப்பட்ட ஆண்டுகளில் இலங்கையின் முடி மன்னனாக விளங்கியுள்ளான். பண்டுகாபயன் என்றொரு மன்னன் கி.மு. 377-307 வரை அரசாண்டுள்ளானென்பதும் நோக்கற்பாலது.

21. சோழியபுரம் என்பதே சுழிபுரமாக மருவியதென்பது ஜோனின் வாதம்.

22. தொல்புரம் என்பது பழைய ஊர் என்பதாகவும், இன்றும் முக்குகர் இக்கிராமத்தில் கூடுதலாக வுள்ளரென்பதும் ஜோனின் கருத்து.

கும்படி வன்னியரை அழைத்து எற்படுத்திப் போனான். அவ்விடத்துள்ள கந்தளாய்க் குளத்தைக் கட்டிச் சூத்திரத்தையும் வைத்தவனிவனென்பர். தற்காலத்து அச்சூத்திரம் பழுதுபட்டுக்கிடப்பதாற் குளத்திற் தண்ணீர் கட்டுப்பட்டு நிற்பதில்லை. அச்சூத்திரம் அங்கிலேயவரசினராலும் இதுவரைக்குந் திருத்தப் பெறாமலிக்கின்றது.

## வன்னியர்

வன்னியர் வரவரப் பெருக்கமடைந்து குறுநிலமன்னரானார். அக்குறுநில மன்னர் ஒருவரின் பின்னொருவராய்த் தோன்றியழிந்தபின் வன்னியர் ஒருமித்து மரபிலுயர்ந்த எழுவரைத்[23] தெரிந்து தலைவராயேற்படுத்தினார்கள். இவர்கள் கண்டியரசர்க்குக் கீழ்ப்பட்டவர்களல்லர், திறை கொடுத்தவர்களுமல்லர். வன்னியர் இப்படிக் கோலாகலமாய்க் காலம் போக்கி வருகையில், கி.பி. 593ம் வருஷம் இலங்காபுரிக்கரசனாயிருந்த உக்கிர போதி மகாராசன் திக்குவிசயம் பண்ணி, இவர்களைத் தன்னாணைக்குக் கீழ்ப்படுத்தி, திறை கொடுத்தரசாளச் செய்து நாட்டதிகாரிகளை வேண்டு மிடங்கடோறும் ஏற்படுத்தினான்.

## உக்கிரசிங்கன்

இவனுக்குப்பின் விசயராசன் மரபிலே உதித்த உக்கிர சிங்கனென்னும்[24] அரசன் கி.பி. 796ல் இந்தியாவிலிருந்து சேனைகளைத் திரட்டிக் கொணர்ந்து,

---

23. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வெளியே பனங்காமம், மேல்பற்று, முள்ளியவளை, கருநாவல் பற்று, கரிக்கட்டு மூலை, தென்னமரவாடி என ஏழு வன்னிப் பிரதேசங்கள் இருந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வன்னிமையால் நிருவகிக்கப்பட்டு வந்தன. வன்னியர்களின் முதற்குடியேற்றம் குளக்கோட்ட மன்னன் காலத்தில் நிகழ்ந்ததென்பது வரலாறு. 'வையாபாடல்' வன்னியரின் வரலாறு கூறும் பனுவல்.

24. கி.பி. முதலாம் நூற்றாண்டில் இலங்கையின் வடபகுதியில் (உத்தரதேசத்தை) வஸப என்ற சிங்கள மன்னனும், கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் மகல்லக நாக, கனிஷ்டதிஸ்ஸ ஆகிய சிங்கள மன்னர்களும், கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் வெகாரிகதிஸ்ஸ என்ற சிங்கள மன்னனும், கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் சிலாமேகவண்ண என்ற மன்னனும் ஆதிக்கம் செலுத்தி உள்ளனர். சிலாமேகவண்ண காலத்தில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற கிரிநாகன் என்பவன் முயற்சித்தான். வெற்றி கிட்டவில்லை. ஆனால் கி.பி. 785 இல் மீண்டுமொரு கிளர்ச்சி சிங்கள மன்னனுக்கு எதிராக நிகழ்ந்தது. சிங்கள ஆட்சியாளனுக்கெதிராக இக்கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தவன், கலிங்க தேசத்தவனாக மணற்றி

சில தலைமுறைகளாக இழந்திருந்த இலங்கையரசாட்சியைத் தனதாக்கி அரசியல் நடாத்தி வருகிறபொழுது தனக்குற்ற ரோக நீங்கற் பொருட்டாக யாத்திரை செய்து நகுலேசர் கோவிலைத் தரிசித்துத் தீர்த்தமாட இந்நாட்டிலே வந்து கீரிமலைச் சாரலிலுள்ள வளவர்கோன் பள்ளத்திற் பாளயம் போட்டிருந்தான்.

## தொண்டமான் வருகை

இவன் வந்த அச்செய்தியைத் தென்னிந்தியாவிலேயுள்ள தொண்டைநாட்டின் அரசனாகிய தொண்டமான் அறிந்து, தனது பரிவாரங்கள் இருமருங்குஞ் சூழ்ந்து வர இவ்விடம்வந்து அரசனைச் சந்தித்து, அரசர்க்குரிய உபசரணைகள் பெற்றபின் அவனை நோக்கி 'அரசனே, உமதாளுகைக்குட் கிடக்கின்ற உடுப்பிட்டியிலுள்ள கரணவாய், மட்டுவிலுள்ள வெள்ளப்பரவை முதலான கடல்களில் நல்ல உப்புத் திரளாய் விளைகிறதென்று கேள்வியால் அறிந்தேன். அதில் வருடந்தோறும் எனது இராச்சியத்தின் பிரசைகளுக்கு வேண்டிய உப்பு விலையாகத் தரவேண்டுமென்று கோரிக்கை செய்தனன். உக்கிரசிங்க அரசனும் தன்னை ஒத்த அவ்வரசன் கேள்விக்கு மறுவாக்கின்றிச் சம்மதமாகி அவ்வுப்புக் கொண்டு போவதற்காக வேண்டும் வழிவகை பண்ணவும் உத்தரவு கொடுத்தார். அதன்பின் தொண்டமான் வடகடலிலிருந்து உப்பு விளையுமிடத்திற்குத் தனது மரக்கலங்கள் வரத்துப் போக்குப் பண்ணவும் மாரிகாலங்களில் அவைக்கொதுக்கிடமாகவும் ஆழமும் விசாலமுமான ஓர் சிற்றாற்றை வெட்டுவித்து உப்பை ஏற்றுமதி பண்ணினான். அவ்வாறு இந்நாளிலுந் தொண்டமானாறெனப்படுகின்றது.[25]

---

(யாழ்ப்பாணம்)யில் குடியேறியிருந்த உக்கிரசிங்கன் என்ற தலைவனாவான். யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் தமிழ் மன்னனாக உக்கிரசிங்கனையே கொள்ள முடியும்.

25. தொண்டைமானாறு இயற்கையான ஒரு கடனீரேரியாகும். வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி பச்சிலைப்பள்ளி ஆகியன புவிச் சரிதவியற்காலத்தில் மூன்று பெருந்தீவுகளாக விளங்கியுள்ளன. தொண்டைமானாறு, நாவற்குழி, உப்பாறு ஆகிய கடனீரேரிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டினை மூன்று பெருந் தீவுகளாகப் பிரித்திருந்தன. வட தொண்டைமனாறு-உப்பாறுக் கடனீரேரிக்கு மேற்குப்பக்கம் ஜம்புக்கோளம் என்றும், தொண்டைமானாறுக்குக் கிழக்குப்பகுதி மணற்றி என்றும், தொண்டைமானாறுக்குத் தென்பகுதியும் உப்பாறுக்குக் கிழக்குப்பகுதியுமான தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என்றும் வழங்கப்பட்டுள்ளன. அவ்வேளை யாழ்ப்பாணக் கடனீரேரி - ஆனையிறவுக் கடனீரேரி கிழக்கில் இந்து சமுத்திரத்தோடு தொடர்புபட்டிருந்தது. கூண்டிக்குளம் மணல்தடை பின்னர் இப்பாதையை அடைத்து விட்டது.

தற்காலம் அந்த ஆறு தூர்ந்து பரவையாயிற்று. இப்போதும் இந்நாட்டரசர் கரணவாய், வெள்ளப்பரவை என்னுமிடங்களில் விளைகின்ற உப்பை இவ்வாற்றின் மேல் கரையிலே குவிப்பித்துக் காவல் செய்து வருகின்றனர். வியாபாரத்துக்காக உள்ளூர் நாவாய்களன்றிப் பிரித்தானிய, பிராஞ்சிய, அமெரிக்க பாய்க்கப்பல்கள் ஆவியந்திரக் கப்பல்கள் வந்து இவ்வுப்பை ஏற்றிப் போவதுண்டு.

## திக் விஜயம்

உக்கிரசிங்கராசன், தலைநகராகிய கதிரைமலையை[26] நோக்கி வன்னி வழியாகச் சென்று அதிகாரிகளாகிய வன்னியர் அளித்த திறைகளை வாங்கிக்கொண்டு, அதன் மேற் தனக்கு வரவேண்டிய திறைகளைக் கோணேசர் கோவிற் செலவுக்காகவிட்டு, இப்படியே அவைகளைக் கோவிலுக்குக் கொடுக்கும்படி இவ்வதிகாரிகளினிடம் உடன்பாட்டுறுதி பண்ணுவித்துத் தனதாளுகையை ஸ்திரப்படுத்திக் கதிரைமலை போய்ச் சேர்ந்தான்.

## மாருதப்புரவீகவல்லி

இவன் போன எட்டாம் வருஷம் சோழதேசவதிபதியாகிய திசையுக்கிரசிங்க சோழனின் அருமருந்தன்ன புத்திரியாகிய மாருதப்புரவீகவல்லியென்னும் ராசகன்னி சென்மத்திற் தான் அடைந்த குன்மரோகத்தால் மெலிந்தவளாகி, வைத்தியரின் ஔடதப் பிரயோகத்தால் ஆரோக்கியமாதல் அசாத்தியம் என்று கண்டு, யாத்திரைபண்ணி நற்றீர்த்தமாடினால் மாறுமென்று எண்ணி, தாதியர், சேடியர் தற்சூழ்ந்துவரச் சேனாவீரர் ஆயுதமணிந்தவர்களாய்க் காவல் செய்யக் காவிரிப்பூம் பட்டினத்தை விட்டுப் புறப்பட்டுப் பல தலங்களுஞ் சென்று தீர்த்தமாடித் திரியுங்காற் சாந்தலிங்கனென்னும் பெயரிய ஒரு தபத்தி அவளைக்கண்டு, கீரிமலைச்சாரலிலே ஓடிக்கொண்டிருக்கின்ற நன்னீரருவியின் முக்கிய தன்மையைச் சொல்லினன். அதைக்கேட்ட அரச கன்னிகை அத்தபத்தியின் யோசனைப்படி கீரிமலைச்சாரலில் வந்திறங்கி அவ்விடத்தே தனக்கும் தன் பரிவாரத்தவர்க்கும் ஏற்ற பாளயமிட்டுப் பலநாட்களாக வாசம் பண்ணி, அங்குள்ள சிற்றாற்றிலே ஸ்நானஞ் செய்து நகுலமுனிவரினாசி பெற்றுத் தலமகிமை, தீர்த்தமகிமைகளைச் சொல்லக்கேட்டு உவப்புடனிருந்தனள். அதினால் அவ்விடங் குமாரத்திபள்ளமெனப் பெயர் பெற்றது. சில காலத்தால் அவளுடைய குன்மவலி நீங்கக் குதிரைமுகமும், மாறிற்றென்றும்

26. கதிரைமலையைக் கதிர்காமமாகக் கருதியதால் வந்த மயக்கம்.

அக்காரணத்தால் அக்குறிச்சிக்கு மாவிட்டபுரமெனப் பெயருண்டாயிற் றென்றும் பழங்கதையாகச் சொல்வர்.[27]

## கந்தசுவாமி கோயில்

அந்த அரசகன்னிகை ரோகம் மாறவே சௌந்தரவதியாகி நகுலமுனி யுடைய ஆலோசனைப்படி அவ்விடத்தே ஒரு கந்தசுவாமிகோயில் கட்டுவிக்கவெண்ணி, வேண்டிய பணத்தையும் அதற்குரிய தளவாடங்களை யும் அனுப்பும்படி தன்னருந் தாதைக்குத் திருமுகம் அனுப்பினள். தனதிருவிழி யொத்த அருமகளின் திருமுகத்தைக் கண்ட தந்தை, அகமிக மகிழ்ந்து ஆனந்தபாஷ்பஞ் சொரிந்து வேண்டிய பணத்தையுஞ் சவிதரித்துக் கந்தசுவாமி, வள்ளியம்மை விக்கிரகங்களையும் வார்ப்பித்துத் தில்லையிற் பிராமணனாகிய பெரியமனத்துள்ளாரிடங் கொடுத்து அனுப்பினன். அவ்வேதி யன் அவைகளையுங் கொண்டு கசாத்துறையில்[28] வந்திறங்கினன்.

## காங்கேயன்துறை

அவ்விடத்திலே காங்கேயன் விக்கிரகங் கொண்டு வந்திறக்கப்பட்டதால் அத்துறை அன்று முதல் இன்று வரைக்குங் காங்கேயன்துறை எனப்பட்டு வருகிற தென்பர். தன் தந்தை அனுப்பிய இவ்விந்தைப் பொருள்களைக் கண்ட மாருதப்புரவீகவல்லி என்னுங் கன்னி மகாகளிகொண்டு மதாபிமானம் பூண்டு ஒரு கோவிலெழுப்புவித்து, அக்கிரகாரம், அன்னசத்திரம், மடமாதிய கட்டிடங்கள் கட்டுவித்துச் சுற்றுமதிலிட்டுக் கந்தசுவாமிகோவிலெனப் பெயர் சூட்டினள். இக்கோவிற்குப் பூசகராகப் பெரிய மனத்துள்ளாரை ஏற்படுத்தி, நித்தியபூசை நடக்க ஏது நியமித்து, ஆணியுத்திரத்தன்று கும்பாபிஷேகம் பண்ணிக் கொடித்தம்பம் நாட்டி, விழாக் கொண்டாட்டம் நடைபெறும்படி செய்தனள். தற்காலத்திலேயும் அத்தினமே விழாத் தொடக்க தினமாக அனுசரிக்கப்படுகின்றது.

## உக்கிரசிங்கனின் காதல்

இக்கோவில் வேலைகள் நடைபெற்றுவருங் காலத்திலே உக்கிரசிங்கராசன்

27. யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்ற மாருதப்புரவல்லியின் கர்ணபரம்பரைக் கதையை பின்னால் வந்த அனைத்து வரலாற்றாசிரியர்களும் எடுத்தாண்டுள்ளனர்.

28. இலங்கையிலிருந்த பௌத்தர்கள், புத்தகாயாவுக்குப் புனித யாத்திரை செய்யும் பொருட்டு, மரக்கலமேறும் துறைமுகமாகக் காங்கேசன்துறை விளங்கியது. அதனால், இதனை மகாவம்சம் காயாத்துறையெனக் குறிப்பிடும்.

மறுபடியும் நகுலேசர் கோவிலைத் தரிசிக்க வந்தனன். அப்போது மாருதப்புரவீகவல்லியின் மட்டற்ற பேரழகைக்கண்டு, மதிமயங்கிப் பாச வலையிற் சிக்குண்டு, அர்த்தசாமத்திலே அக்கட்டழகி தங்கியிருந்த பாளையத்திற் சென்று, தாதியர், சேடியர், சேனாவீரர் உறக்கமறிந்து ஒருவரு மறியாவண்ணம் அவளைத் தன் பாளையத்திற் கொணர்ந்து பாரியாக வைத்துக் கொண்டான். அதிகாலையிற் துயினீத்தெழுந்த சேனாவீரர் முதலானோர் 'ஐயையோ! எங்கள் இராசகன்னிகையைக் காண்கிலோமே, எங்குற்றனளோ தெரிகிலேமேயென்று ஆயாசப்பட்டு அங்குமிங்குமோடித் தேடிவரும்போது உக்கிரசிங்கவேந்தனது பாளையத்திலே அப்பாவை உலவு வதைக் கண்டு, அவ்வரனிடஞ் சென்று, 'வேந்தனே நாம் செய்ய வேண்டியன யாவை' என்று தக்க வந்தனை வழிபாட்டுடன் கேட்டுநிற்க, அவன் அவர் களைப் பார்த்து 'ஓய் வீரரே, இதோ மாருதப்புரவீகவல்லி என் பட்டத்துத் தேவியாயினள், நீங்கள் சோழதேசம் போய் இச்சோபன செய்தியைப் பிதா மாதாவுக்குஞ் சுற்றமித்தரருக்குந் தெரிவியுங்கள்' என்றுரைத்து அவர்களுக்கு வழிச் செலவுக்கு வேண்டிய பணமுங் கொடுத்தனுப்பினன். கந்தசுவாமிகோவி லின் விழாக் கொண்டாட்டம் முடிந்தபின் உக்கிரசிங்கன் மாருதப்புரவீகவல்லி யுடன் இலங்கைக்குச் சென்று கதிலைமலையிலே தனது விவாக சடங்கை வேதியர்முன் முறைப்படி முடித்துத் தனது பிரியையாகிய மாருதப்புரவீகவல்லி யுடன் பூவும் மணமும் போலவும், எள்ளும் எண்ணெயும் போலவும், உடலும் உயிரும் போலவுமிசைந்து சுகானுபோக முற்றிருந்தனன்.

## பெரிய மனத்துளார் திருமணம்

கந்தசுவாமிகோவிற் பூசைசெய்து வந்த பெரியமனத்துள்ளார் பிரமசரியநீத்து இல்லாச்சிரமியாக விரும்பி தில்லையிற் பெண் ணெல்லை கடவாளாதலால், கீரிமலைச்சாரலிலிருந்த வாமதேவாசாரியரது வமிசத் திலே வந்த சாம்பசிவை ஐயரின் மகள் வாலாம்பிகையை விவாகஞ் செய்து, அப்பெண்ணுக்குத் தில்லைநாயகவல்லி என மறுநாமஞ்சூட்டி, கந்தசுவாமி கோவிலின் தெற்கு வீதியிலுள்ள தனது அக்கிரகாரத்தில் வாசஞ் செய்து, முறைபிசகாது பணிவிடைகளை நடத்தி வந்தனர். அதுமுதல் இருதிறப் பிராமணக் குடும்பங்களும் ஒரு குடும்பமாக ஈரிடக் கோவில்களுக்கும் ஒருவரே விசாரணைக்கர்த்தரானார்.

## தலைநகர் மாற்றம்

கதிரைமலையில் வாசஞ் செய்த உக்கிரசிங்கராசன் சிலகாலத்தின்பின்

செங்கடநகரியை[29] ராசதானியாக்கி அங்ஙனம் இருந்தரசாண்டு வருங் காலத்தில் இவனுக்கு, புருஷராசலட்சணங்கள் நிறைவுற்ற நரசிங்கனென் னுஞ் சுதனும், சண்பகவதி என்னுஞ் சுதையும் பிறந்தனர். அவன் புத்திர புத்திரிக்குப் பருவகாலத்திலே விவாகஞ் செய்து வைத்து நரசிங்கனென்னும் பெயர் படைத்த வாலசிங்கனுக்குச் செயதுங்க வரராசசிங்கம் என்னும் பெயரால் முடிசூட்டி உலகாளவைத்துத் தன் முன்னோர் போன வழிநாடிச் சென்றனன்.

---

29. உக்கிரசிங்கன் தனது தலைநகரைக் கதிரைமலையிலிருந்து (கந்தரோடை) செங்கட நகரிக்கு மாற்றிக் கொண்டான். இந்தச் செங்கட நகரியைக் கண்டியென அடையாளங் காணபோரின் கருத்து எவ்வகையிலும் ஏற்றதாகவில்லை. 'சிங்கைநகர்' என்ற பெயரே திரிவுபட்டு செங்கடநகரியாகியதென்பது ஆய்வுவல்ல அறிஞர்கள் கருத்து. உக்கிரசிங்கன் கந்தரோடையை விட்டுத் தனது தலைநகரைச் சிங்கை நகருக்கு மாற்றிக் கொண்டமைக்கான காரணங்கள் தெளிவானவை. கந்தரோடைப் பிரதேசம் பௌத்தமத மக்களது முக்கிய பிரதேசமாக மாறியிருந்தது. அத்துடன் சங்கமித்த தேரியின் வருகைக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகைதந்த பௌத்த யாத்திரிகர்கள் ஜம்புகோளப்பட்டின (திருவடிநிலை) மூடாக வந்திறங்கினர். ஜம்புக்கோளப் பட்டினத்தில் விகாரை ஒன்றும், அதனைவிட ஸாலிப்பத விகாரை, திஸ்ஸ விகாரை என்பனவும் நாகதீவில் அமைந்திருந்தன. கந்தரோடையோடு வல்லிபுரத்திலும் பௌத்த மதமக்கள் பரவியிருந்தனர். பௌத்தம் நாகதீபப் பிரதேசத்தில் பரவியிருந்த ஒரு கால கட்டத்தில் சிங்கள ஆட்சியாளரின் ஆதிக்கத்திலிருந்து உக்கிரசிங்கன் விடுவித்திருந்தான். தீவிர சைவனாக இவன் விளங்கியுள்ளான் என்பதை இவன் ஆற்றிய திருப்பணிகள் நிரூபிக்கின்றன. எனினும் பௌத்தத்தினது செல்வாக்கு கந்தரோடை வல்லிபுரப்பகுதிகளில் நிலைகொண்டிருந்தது. அதாவது நாகதீபத்தின் மேற்குப்பகுதி, கிழக்குப்பகுதி என்பன வேற்று மத ஆதிக்கத்திலிருக்கத் தென்பகுதி (யாழ்ப்பாணம்) மக்கள் விரும்பிக் குடியேறியிராத பிரதேசமாக விளங்கியது. இத்தகுநிலையில் தனது தலைநகரை இடம் மாற்றுவதற்கு உக்கிரசிங்கன் விரும்பினான். சைவம் சிறப்புறக்கூடிய புதியதொரு பிரதேசத்தை அவன் தெரிவு செய்ய விரும்பியமையின் விளைவே, சிங்கை நகர் புதிய தலைநகராக மாறியது. 'உக்கிரசிங்கன் சிவ வழிபாடுடையவனானபடியால் புத்த பள்ளிகள் நிறைந்த கதிலைமலையிலும் சிங்கை நகரே சிறந்ததென நினைத்தான் போலும்' என்கிறார் முதலியார் செ. இராசநாயகம் .

உக்கிரசிங்கன் புதிய தலைநகரை தன் இராச்சியத்திலுருவாக்க விரும்பி வன்னிப் பிரதேசத்தில் விஜயம் ஒன்றினை மேற்கொண்டபோது வன்னியர்கள் எழுவரும் அவனது மேலாட்சியை ஏற்றுக் கொண்டனரென அறியக் கிடைக்கின்றன. தமிழரசின் ஆரம்பத் தலைநகரான சிங்கைநகர், யாழ்ப்பாணத்திற்கு வெளியே வன்னிப் பிராந்தியத்தில் குறிப்பாக பூநகரியில் இருந்ததெனக் கொள்ள முடியுமென்ற சு. புஸ்பரத்தினத்தின் கூற்று ஏற்கக் கூடியதாகும்.

## யாழ்ப்பாடி

செயதுங்க வரராசசிங்கன் தனதரசுரிமை ஏற்றுச் செங்கோல் செலுத்தி வருங் காலத்திலே, சோழநாட்டிலிருந்து கவிபாடிக் கன பரிசுகள் பெற்ற கவிவாணனும் யாழ்வல்லவனுமாகிய ஓர் குருடன்,[30] செயதுங்க வரராசசிங்கனென்னும்[31] வாலசிங்கன் பேரிற்[31] புகழ்மாலையாக ஓர் பிரபந்தம் பாடிக் கொணர்ந்து இராசசபையிலே வந்துட்கார்ந்து, தனது யாழ்க்கருவியிற் கைபோட்டு, நரம்புகளிறுக்கித் தொனி பார்த்துச் சுதிகூட்டி யாலாபித்துக் கையாலுந்தனது குரற்றொனியாலுஞ் சங்கீத சாகித்திய முறைப்படி பாடினான். அவையிலுள்ளோர் தத்தஞ் செவிகளையே வாய்களாகக் கொண்டு, கானரசத்தை யமிர்தம் போற் பருகிப் பாடகனுக்கும் யாழ்த்தொனிக்கும் பேதமின்மையால், நயந்து, வியந்து, புகழ்ந்து ஆச்சரியமுற்றிருக்க, அரசனும் இதற்கிணையின்றென்று ஆனந்தக் களிப்புற்று அதற்குப் பரிசாக மணற்றிடலென்னும் இந்நாட்டை யாழ்ப்பாடிக்கு[32] கொடுத்தான்.

---

சிங்கைநகர் என்ற பெயர் எவ்வாறு வழங்கலாயிற்று? கலிங்கநாட்டு நகர்களில் ஒன்றாகிய ஸிங்கபுரத்தின் தொடர்பாக வந்தது என்பாருளர். ஆனால் சிங்கைநகர் என்ற பெயர், முதன்முதல் கதிரைமலையிலிருந்து தலைநகரை வேறிடத்திற்கு மாற்றிப் புதியதலைநகர் ஒன்றினை உருவாக்கிய உக்கிரசிங்கனின் பெயரைத்தாங்கி, சிங்க(ன்) நகர் என விளங்கியிருந்ததெனக் கொள்வதே சாலப் பொருத்தமானது.

30. யாழ்ப்பாடியின் கதையை மயில்வாகனப் புலவரின் வைபவமாலை விபரித்துள்ளது. அதனையே ஜோனும் ஏனையோரும் மறுதலையின்றி எடுத்துக் கூறியுள்ளனர். யாழ்ப்பாடி என்ற அந்தகன் (குருடன்) மன்னனின் அரசசபைக்கு வந்தபோது, அந்தகனை மன்னன் பார்க்கக் கூடாதென்பதற்காக திரையிட்டு இருந்து, யாழ்ப்பாடியின் இசையை மன்னன் கேட்டான் என்றும், தனக்கும் மன்னனுக்கும் இடையில் திரையொன்று இடப்பட்டிருப்பதை உணர்ந்த யாழ்ப்பாடி பின்வருமாறு பாடினான் எனக் குறிப்புள்ளது.

'நரைகோட்டிளங்கன்று நல்வளநாடு நயந்தளிப்பான்
விரையூட்டு தார்ப்புயன் வெற்பீழமன்னனென்றே விரும்பிக்
கரையோட்டமாக மரக்கலம் போட்டு நினைக்காணவந்தாற்
றிரைபோட்டிருந்தனை யே வா லசிங்கசிரோமணியே'

31. உக்கிரசிங்கனுக்கும் மாருதப்புரவல்லிக்கும் நரசிங்கன், செண்பகவதி என இருபிள்ளைகள் இருந்தனர். உக்கிரசிங்கனின் பின்னர் ஆட்சிப் பொறுப்பை நரசிங்கன் ஜெயதுங்கப்பரராசசிங்கன் எனும் நாமத்தோடு ஏற்றுக் கொண்டான்.

32. யாழ்ப்பாடிக்குப் பரிசிலாகக் கிடைத்த மணற்றிடர் பாஷையூர், கரையூர் பகுதிகளை உள்ளடக்கிய யாழ்ப்பாணமாகும். கண் தெரியாத யாழ்ப்பாடிக்கு இசைக்குப்

யாழ்ப்பாடி தன்னாமகாரணப்படி இந்நாட்டுக்கு யாழ்ப்பாணமெனப்[33] பெயரிட்டு வடதேசத்திலிருந்து சில தமிழ்க்குடிகளை அழைத்துக் கொண்டு வந்துகுடியேற்றி இவ்விடமிருந்த சிங்களவரையும் அரசாண்டு வயோதிகனா யிறந்து போயினன்.[34] அதன் பின்பு சிங்களவர் இந்நாட்டைத் தந்நாடாக்கி ஆளுகை பண்ணக் கருதித் தமிழ்க்குடிகளை நெருக்கி ஒடுக்கினர். இடுக்கண் பட்ட அக்குடிகளோ 'நரியூரும் புலியூராயிற' றென்று மனத்துயர்கொண்டு வந்தவழி நோக்கி வடதேசத்துள்ள தந்நாடுகளுக்குத் திரும்பி விட்டார்.

யாழ்ப்பாணத்தின் நிலையோ 'சேற்றிலே நாட்டிய கம்பம் போலா'டித் தள்ளாடிக் கொண்டிருந்தது.

இசைபெறும் இந்திவேந்தரிருடிகள் சோழன்கன்னி
நசையுற்றிந் நாடுவந்து நாள் சிலகழித்துச் சென்றார்
குசையனாங்குகன் மற்றுள்ளார் குறுநிலத்தரசரானார்
அசைவறுவாலசிங்கன் அந்தகற்கீந்தானன்றே.

---

பரிசாகத் தனது இராச்சியத்திற்கு வடக்கேயிருந்த ஒரு மணல்வெளியைத் தமிழ்மன்னன் ஒருவன் பரிசளித்ததாகக் கூறும் இந்தச் சம்பவத்தின் உண்மை பொய் எவ்வளவு என்பதை ஆராய்வதை விடுத்து மணல் வெளியாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணம் வடக்கேயிருந்தது என்றால், அதைப் பரிசாகத் தந்த மன்னன் இருந்தவிடம் தென் நிலப்பரப்பாக இருந்தது என்பது ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதே. சிங்கைநகர், பூநகரிப்பகுதியிலிருந்ததென்பதற்கு இதுவும் ஆதாரமாகின்றது.

33. பாணன் என்றால் பாடகன். யாழ்ப்பாடி யாழ்ப்பாணன் ஆகிறது.

34. பரிசில் பெற்ற யாழ்ப்பாடி நாடு திரும்பினான். அவன் மனைவி யாவற்றைப் பரிசிலாகக் கொண்டு வந்தீர் என வினவுவதாயும் அதற்கு யாழ்ப்பாடி விடையிறுப்பதாகவும் ஒரு பாடலுள்ளது. அதனையும் ஜோன் தனது நூலின் அடிக்குறிப்பில் சேர்த்துள்ளார்.

'ஈழராமனையேபாடி
  என் கொணர்ந்தாய்பாணா நீ யென்றாள்பாணி
வம்பதாங்களபமென்றேன் பூசுமென்றாள்
  மாதங்கமென்றேன் யாம்வாழ்ந்தேயென்றாள்
பம்புசீர்வேழமென்றேன் றின்னுமென்றாள்
  பகடென்றேனுழு மென்றாள் பழனந்தன்னைக்
கம்பமாவென்றே னற்களியாமென்றாள்
  நைமாவென்றேன் சும்மாகலங்கினாளே'

## அதிகாரம் 2

# தமிழரசு

கூரியமதியோனான கூழங்கைச்சக்கரவர்த்தி
சீரியகுலத்தரான சிலமகான்களைவரித்தும்
பாரியகட்டடங்கள் பண்புடனெழுப்பி வைத்தும்
ஆரியர்செங்கோலோச்ச அரசியற்நடியிட்டானே.

இந்நாட்டின் தமிழர் தந்நாடாகிய வடதேசம் போய் விடச் சிங்களக்கலகத்துக்கு அஞ்சாமலிருந்து காலம் விட்டுவந்த பொன்பற்றியூர் வேளாளன் பாண்டிமளவன் என்னும் பிரபு மதுரையிற் சென்று அவ்விடத்தில் இராச வுத்தியோகத்திக்கேற்ற கல்வி கற்றுக் கொண்டிருந்த திசையுக்கிரசிங்க சோழனின் மகன் சிங்ககேதுவின் மருகன் சிங்கையாரியன்[1] என்னும் சூரிய குலத்தோன்றலைக் கண்டு, யாழ்ப்பாண ஸ்திதியை அவருக்கு அறிவித்து, இவ்விராச்சியத்தை அரசாள வரவேண்டுமென்று கோரிக்கை பண்ணினான்.

---

1. பாண்டிமழவனால் இந்நாட்டை ஆள்வதற்கு அழைத்து வரப்பட்ட இளவரசனான சிங்கையாரியன், கலிங்கமாகன் என்பவனென இன்று அடையாளங் காணப்பட்டுள்ளான். கி.பி. 1215 ஆம் ஆண்டு கலிங்கமாகன் என்பான் இலங்கையைக் கைப்பற்றி 1236 ஆம் ஆண்டு வரையும் இருப்பதொரு வருடங்கள் பொலநறுவையிலிருந்து ஆட்சி செலுத்தினான். இலங்கை வரலாற்றில் கலிங்கமாகனின் படையெடுப்பும் ஆட்சியும் மிக முக்கியமான திருப்பு முனையாகக் கருதப்படக்கூடியவை. தமிழர் பிரதேசங்களைச் சிங்கள ஆதிக்கத்திலிருந்து மீட்டு இராசரட்டை எனப்படும் வடபகுதியில் குடியேறியிருந்த சிங்கள ஆக்கிரமிப்பாளரைத் தென்புலம் பெயர வைத்தவன் மாகன் ஆவான். கலிங்கமாகன் ஆட்சியில் சிங்கள மக்களும் பௌத்தமதமும் பெரிதும் பாதிப்புற்றன. கலிங்கமாகனின் ஆட்சியில் சிங்கள மக்களுக்கும் பௌத்த மதத்திற்கும் எதிராக நிகழ்ந்த சம்பவங்களின் எதிரொலி இராசரட்டைப் பிரதேசத்தில் மட்டுமன்றி உத்தரதேசத்தில் குறிப்பாக நாகதீபத்திலும் (யாழ்ப்பாணக்குடாநாடு) எதிரொலித்துள்ளது. அதனால் இப்பிரதேசத்தில் வாழ்ந்த சிங்கள பௌத்தர்கள் தமது பாதுகாப்புக்கருதி யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு இடம் பெயர நேர்ந்தது. அதனால் தான் தமிழ் இராச்சியம் தோற்றம் பெற்ற போது அல்லது பூநகரியின் சிங்கை நகரிலிருந்து தமிழர் இராச்சியம் யாழ்ப்பாணத்திற்கு இடம் மாறிய போது மக்கட் குடியேற்றங்களை யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிறுவ நேர்ந்தது. 1236 ஆம் ஆண்டு 2 ஆம் பராக்கிரமபாகு என்ற சிங்கள மன்னன், கலிங்கமாகனைப் பொலநறுவையிலிருந்து துரத்தி விட்டான். அந்த யுத்தத்தில்

'பழம் நழுவிப் பாலில் விழுந்தாலொ'த்து இராசகுமாரனுஞ் சந்தோஷத் தோடிவன் கேள்விக்கிசைந்து கலைவல்ல சிகாமணியாகிய புவனேகவாகு வென்னும் மந்திரியையும் காசிநகர் குலோத்துங்கனாகிய கெங்காதர ஐய ரென்னுங் குருவையும் அழைத்துக் கொண்டு பாண்டியன் வழிவிட்டனுப்பத் தனது பரிவாரங்களுடனே யாழ்ப்பாணம்[2] வந்திறங்கினான்.

## புதிய தலைநகர்

அவன் இந்நாட்டு நகர்வளமறிந்து நல்லூர்ப்பகுதியிலே[3] யரசிருக்கையை ஸ்தாபிக்கக்கருதிச் சுபமுகூர்த்தத்தில் அங்கே அஸ்திவாரமிட்டு, அரண்மனை, அந்தப்புரம், சபாமண்டபம், கொலுமண்டபம், யானைப்பந்தி,

---

கலிங்கமாகன் இறந்ததாக ஆதாரமில்லை என்றும் அவன் வடவிலங்கைக்குத் தனது எஞ்சிய படைகளுடன் சென்றிருக்க வேண்டு மென்று கா. இந்திரபாலா கூறுகிறார். எவ்வாறாயினும் 1236 தொட்டு 1242 வரை கலிங்கமாகன் எங்கிருந்தான் என்பது தெளிவாகத் தெரியவில்லை. இக்குறித்த காலத்தில் வடவிலங்கையைப் பாண்டிமழவன் என்ற அதிகாரியே நிர்வகித்து வந்தான். தென்னிலங்கைச் சிங்களவரசனின் அச்சுறுத்தல் ஆரம்பமானபோது பாண்டிமழவன், கரந்துறைந்திருந்த கலிங்கமாகனை வலிந்து அழைத்து வந்து விஜயகாலிங்க ஆரியச்சக்கரவர்த்தி என்ற நாமத்தோடு அரியணை ஏற்றினான். கலிங்கமாகன் சிங்கைநகரின் மன்னனாக அமைந்ததால் சிங்கை ஆரியன் எனவும் அழைக்கப்பட்டான். விஜயகாலிங்கன் என்ற பெயரே, விசய கூழங்கைச் சக்கரவர்த்தி என வைபவமாலையில் திரிவு பெற்றதென்பது சுவாமி ஞானப்பிரகாசரின் வாதமாகும். இது ஏற்புடையதே.

2. பாண்டிமழவன் சிங்கையாரியனை (விஜய காலிங்கனை) அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்திறங்கினானென்பது தவறு. அக்காலத்தில் தமிழரசின் தலைநகராக விளங்கிய (பூநகரி) சிங்கைநகருக்கே வந்திறங்கினான். சிங்கை நகரிலிருந்து தலைநகரை மீண்டும் நாகதீபத்திற்கு (யாழ்ப்பாணக் குடாநாடு) இடம்மாற்றிய பெருமை இந்தக் காலிங்க ஆரியச்சக்கரவர்த்தியையே சாரும்.

3. வன்னிப் பிரதேசத்திலிருந்த சிங்கை நகரைப் புதியதொரு பிரதேசத்திற்கு அதாவது குடாநாட்டிற்கு இடம்மாற்றுவதற்குப் பல்வேறு காரணங்களுள்ளன. கலிங்கத்து மாகனின் படையெடுப்பால் இராசரட்டையின் (வன்னியுட்பட) நீர்ப்பாசன நாகரிகம் அழிவுற நேர்ந்தது. பௌத்தத்தையும் சிங்களவர்களையும் இப்பகுதிகளிலிருந்து அகற்றும் நோக்கோடு வீரசைவனான கலிங்கத்துமாகன் எடுத்த நடவடிக்கைகள், ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளாக நன்கு பயிரிடப்பட்டு வந்த வயல் நிலங்களைக் காடு பரவ வைத்தன. நீர்ப்பாசனகுளங்கள் கவனிப்பாரின்றிச் சிதிலமடைந்தன. காட்டு நோய்களும் மலேரியாவும் மக்களைப் பீடித்து அழிவை ஏற்படுத்தின. வெள்ளப் பெருக்கும் வறட்சியும் இப்பகுதிகளில் சகசமாயின. மக்கள் செறிவாக

குதிரைப்பந்தி, சேனாவீரர்மனை, கெங்காதர ஐயரும் அவர் பத்தினியாகிய அன்னபூரணி அம்மாளும், வாசம்பண்ணுதற்கேற்ற அக்கிரகாரம் முதலிய மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் கட்டுவித்து, ஓர் உத்தியானத்தை உண்டாக்கி அதன் மத்தியில் முப்புடைக்கூபமும் வெட்டுவித்து யமுனா தீர்த்தத்தையும், அழைப்பித்துக் கலந்துவிட்டு, யமுனா ஏரியெனப் பெயரிட்டு, மஞ்சனமண்டபமுங் கட்டுவித்துத் தன்னகர்க்குப் பாதுகாப்பாகக் கீழ்த்திசைக்கு வெயிலுகந்த பிள்ளையார் கோவிலையும் மேற்றிசைக்கு, வீரமாகாளியம்மை கோவிலையும், தென்திசைக்கு கயிலை விநாயகர் கோவிலையும், வடதிசைக்குச் சட்டநாதசுவாமி கோவில், தையல்நாயகியம்மை கோவில், சாலை விநாயகர் கோவில்களையும் எழுப்பி, மத்தியிற் கந்தசுவாமி கோவிற் றிருப்பணியும் முடித்துச் சற்று மதிலிட்டுத் திலகவதியென்னும் பாரிசமேதராய் ஆடம்பரத்துடன் அன்னதானமீந்து மங்களகரமான வாழ்த்தொலியால் அந்தணர் ஆசிகூற மனக்கிளர்ச்சியோடு கிரகப்பிரவேசஞ் செய்தனர்.

‘இலகியசகாத்த மெண்ணூற்றெழுபதாமாண்டி னெல்லை[4]
யலர்பொலிமாலைமார்பனாம் புவனேகவாகு
நலமிகுயாழ்ப்பாணத்தி னகரிகட்டுவித்து நல்லைக்
குலவியகந்தனார்க்குக் கோவிலும்புரிவித்தானே’ என்பர்.

---

வாழ்ந்த உத்தரபிரதேசம், மக்கள் அரிதாக வாழும் பகுதியாக மாறியது. அதனால் விஜய காலிங்கன், சிங்கை நகரிலிருந்து இராசதானியை வடக்கே நகர்த்த விருப்பினான். அத்துடன் சிங்கள மன்னனிடம் கலிங்கத்து மாகனாக அரசிருந்தபோது அடைந்த பெருந் தோல்வியின் தாக்கமும் தலைநகர் மாற்றத்திற்குத் தூண்டியிருக்கும்.

4. யாழ்ப்பாண வைபவமாலையின்படி விஜய காலிங்கனின் மந்திரியாகப் புவனேகவாகு என்பவன் இருந்துள்ளான். அவன் குடாநாட்டில் புதிய தலைநகரைத் தக்கவிடத்தில் தேர்ந்தெடுத்து உருவாக்கப் பணிக்கப்பட்டான். ‘இலக்கிய சகாப்த மெண்ணூற்றெழுபதாமாண்டு’ எனச் செய்யுள் குறிப்பது கி.பி. 1248 ஆகுமென சுவாமி ஞானப்பிரகாசரின் கருத்து மிகப் பொருத்தமானது. இக்குறித்த ஆண்டிற்கு முன் யாழ்ப்பாண நகரி இருந்த தென்பதற்கு ஆதாரமில்லை. எனவே 1242 இல் சிம்மாசனமேறிய காலிங்க ஆரியச்சக்கரவர்த்தி, 1248 இல் யாழ்ப்பாண நகரியை உருவாக்கி அங்கு தனது இராசதானியை அமைத்துக் கொண்டான். உக்கிரசிங்கன் காலத்தில் கதிரைமலை (கந்தரோடையிலிருந்து சிங்கை நகருக்கு (பூநகரி) மாறிய தலைநகர் காலிங்க சிங்கை ஆரியன் காலத்தில் குடாநாட்டில் யாழ்ப்பாண நகருக்கு மாறியது.

குறிப்பு: ‘தமிழரசு’ என்ற இந்த இரண்டாம் அதிகாரத்திற்கு ஜோன், தனது முதலாவது பதிப்பில் ‘ஆரியரினரசு’ எனப் பெயரிட்டிருந்தார். யாழ்ப்பாண மன்னர்கள்

## குடியேற்றம்

இவ்வண்ணம் அரசின் விதிப்படி கோவிற் கும்பாபிஷேக முதலிய கிருத்தியங்களை முடித்து நித்தியபூசை நியமித்துச் சம்பிரமமுற்றிருக்குங் காலத்தொருநாள் இந்நாட்டிலே பின்னுமனேக பிரசைகள் வாசம்பண்ண வேண்டுமென ஆசை மேலிட்டதனால் மந்திரியாகிய புவனேகவாகுவுடன் ஆலோசித்து இந்நாட்டுக்குச் சில தமிழ்க்குடிகளை[5] அனுப்பவேண்டும் என்று தமிழரசருக்குப் பத்திரமனுப்பினான். அவ்வரசர்களும் இவன் எண்ணப்படியே சில குடிகளை இந்நாட்டுக்கனுப்ப, அவர்களும் அடிமை குடிமைகளோடு வந்து கரைசேர்ந்தனர்.

## பிரமுகர்கள்

அவர்களுக்குள்ளே பொன்பற்றியூர் வேளாளன் பாண்டிமளவனையும், அவனுடைய மைத்துனனாகிய சண்பகமளவனையும், அவர்கள் தம்பிமா ரிருவரையும் திருநெல்வேலியிலும், காவிரியூர் புரவலாதிதேவனின் சேஷ்ட புத்திரனாகிய நரசிங்கதேவனை மயிலிட்டியிலும், வாவிநகர் வேளாளன் சண்பகமாப்பாணனையும், அவன் கிளைஞனான சந்திரசேகர மாப்பாண னையும், கனகராயனென்னுஞ் செட்டியையுந் தெல்லிப்பள்ளியிலும், கோவலூர் வேளாளன் பேராயிரமுடையானை இணுவிலுங் குடியேற்றினான். இணுவில் அக்காலத்திலே திருத்தப்படாக் காடாயிருந்ததாற் பேராயிர முடையான் மேலைக் கிராமத்திற்குப் போய் அங்கே வாசம் பண்ணினான்.

பின்னுஞ் சிங்கையாரிய மகாராசன் இராசமுத்திரையோடு பல

---

ஆரிய பரம்பரையினரல்லர் என்ற முடிவுக்கு வந்ததால், இரண்டாம் பதிப்பில் அதிகாரப் பெயரை மாற்றிவிட்டார். ‘அவர்கள் இராமேஸ்வரத்துப் பிராமண அரச குடியிற் சம்பந்தஞ் செய்தபின், உபவீதம் அணிந்து ஆரிய அரசர் என்ற நாமம் புனைந்தனரென்ற செ. இராசநாயகத்தின் கருத்து ஏற்புடையது.

5. யாழ்ப்பாண நகரி தலைநகராக மாறியதும், இராசதானிக்கு அதிக மக்கள் தேவைப்பட்டார்கள். நிலவளத்திற்கு ஏற்ப மனிதவளம் குறைந்து காணப்பட்டது. தென்புலம் பெயர்ந்த (சிங்கள) மக்களது தோட்டங்களும் வயல்களும் வதிவடங்களும் தூர்ந்து போகத் தொடங்கின. எனவே, யாழ்ப்பாண இராச்சியத்தின் சமூக பொருளாதார அரசியற் பலத்தைக் கட்டியெழுப்புவதற்கு வேறிடங்களிலிருந்து மக்களைத் தருவித்துக் குடியேற்றங்கள் நிறுவுவது அத்தியாவசியமாகியது. எனவே, யாழ்ப்பாண அரசின் முதல் மன்னன் விஜய காலிங்க ஆரியன் தென்னிந்தியாவிலிருந்து மக்களை இங்கு குடியேற்ற வரவழைக்க நேர்ந்தது.

வரிசைகள் பெற்ற கச்சூர் வேளாளனாகிய நீலகண்டனையும், அவனது தம்பிமார் நால்வரையும் பச்சிலைப்பள்ளியிலும், காஞ்சிபுரத்திலிருந்து வந்த பல்லவன் என்னும் பிரபு முதலாம் முப்பிரபுக்களையும் பல்லவராயன் கட்டிலும், புல்லூர் வேளாளன் தேவாரேந்திரனைக் கோயிலாக்கண்டியிலும், சிகரமாநகர வேளாளன் கனகமளவனையும் தம்பிமார் நால்வரையும் புலோலியிலும், கூபநாட்டு வேளாளன் கூபகாரேந்திரனையும் புண்ணிய பூபாலனையும் தொல்புரத்திலும், ஏரெழுபதென்னும் பிரபந்தம் பாடப்பெற்ற மரபிலுயர்ந்த வேளாளன் தொண்டைமண்டலத்து மண்ணாடுகொண்டமுதலி யென்பவனை இருபாலையிலும், செய்யூர் வேளாளன் இருமரபுந்துய்ய தனிநாயகனை நெடுந்தீவிலுங் குடியிருத்தினான்.

## மாதாக்கர்கள்

இவ்வாறு வடதேசத்திலே பலவிடங்களிலுமிருந்து அனுப்பப்பட்டு வந்த பிரபுக்கள் தத்தமதடிமை குடிமைகளுடன் அங்கங்கே யானந்தமுற்றிருக்கையில், அரசன் வல்லியமாதாக்கன் என்னும் பராக்கிரம வீரனை மேலைப் பற்றுக்கும், சண்பகமதாக்கனென்னும் வீரசூரனைக் கீழைப்பற்றுக்கும், உத்தண்ட கெம்பீர வீரனாகிய இமையாணன் என்னும் மாதாக்கனை வடபற்றுக்கும், வெற்றிமாதாக்கன் என்னும் விசயபராக்கிரமனைத் தென்பற்றுக்கும் அதிகாரிகளாக நிறுத்தி, வீரசிகாமணியாகிய வீரசிங்கனைச் சேனையின் அதிபதியாக்கி, நகருக்குப் புறமதிலுங் கட்டுவித்துச் சுபமுகூர்த்தத்தில் மகுடாபிஷேகம் பெற்று, மந்திரியாகிய புவனேகவாகுவோடு நகரப் பிரதட்சணம் பண்ணித் தந்தங்களிளைத்து மணிகளழுத்திச் செய்யப்பட்ட சிங்காசனமேறி, அரசியல் தொடங்கி மனுநெறிமுறை பிறழாது மக்கட் பயிர்செழிக்கச் செங்கோலேச்சினன்.

## கூழங்கை

இவனுக்கு ஒருகை கூழங்கையானதால் விசய கூழங்கைச் சக்கரவர்த்தி[6] எனப் பின்னொரு நாமமுண்டு. அரசாளத் தொடங்கிச் சில தினத்தின் பின் சக்கரவர்த்தியும், மந்திரியும் கீரிமலைக்குப் போய்த் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனஞ் செய்து அவ்வாலய விசாரணையை அரசாட்சிக்குள்ளாக்கி மாவிட்டபுரக் கந்தசுவாமிக் கோவில் வந்து, பெரியமனத்துள்ளாரின் பேரனுஞ்

6. விஜய காலிங்க சக்கரவர்த்தி என்பதையே யாழ்ப்பாண வைபவமாலை ஆசிரியர் மயில்வாகனப் புலவர் விசய கூழங்கைச் சக்கரவர்த்தி எனத் திரித்தெழுதிவிட்டாரென்பது பல அறிஞர்களது முடிவு.

சிதம்பர தீட்சகரின் குமாரனுமாகிய சின்னமனத்துள்ளாரிட்ட விருந்தருந்தி அவ்விருந்து அதியுச்சிதமாயிருந்ததாற் புவனேகவாகு தன் கலைத்திறமை விளங்க ஒவ்வொருவகைப் பதார்த்தத்திற்கும் ஒவ்வோர் பாவாகப் பாடிப்படித்து மகிழ்ந்தார். அவர் பாடிய கவிகளில் இரண்டு வருமாறு:

'இன்னமுதம்விண்டு விண்ணோர்க்கீந்த செயலன்னதுவாம்
மன்னவனுந்தொக்கவருதினியும் - நன்னருண்ண
அன்னமளித்தின்னாளிலாதரவுதந்துநின்ற
சின்னமனத்தாரின் செயல்'.

'சின்னமனத்தான் செயும்விருந்திற்சாற்றுருசி
அன்னதினம்விண்ணோரறிந்திருந்தால் - முன்னலைவாய்
வெற்பதனைக் காவியுய்த்துவேலைவிட்டுநின்றுலைதல்
அற்பமெனத்தள்ளுவரேயாம்'.

## ஆலயங்கள் அமைத்தல்

இப்படியே ஊண்சுவையால் அகங்களிகொண்ட அரசனும் மந்திரியும் ஆலய ஒழுங்குகள் நிரூபித்துக் கயிலைப் பதி என்ற அழைக்கப்பட்ட நமதிருக்கை யாகிய நல்லூரை நோக்கிச் சென்றனர். இதற்குச் சிலநாட்களின் பின்னர் கயிலைவிநாயகர் கோவிலின் பக்கத்தே கயிலைநாதர், கயிலைநாயகி யம்மை கோவில்களை மற்றெவற்றினும் விசேடமுற இயற்றுவித்து, முச்சபை, பரிவார தேவுக்களின் வாசம், உக்கிராணசாலை, பாகசாலை, அக்கிரகாரம், தேரோடும் வீதி, மடம், அன்னசத்திர முதலானவைகளை ஆக்குவித்து, சுற்றுமதிலும், கோபுரமுமெழுப்பி கேதாரத்தில் மன்மதனர்ச்சித்துவந்த ஆதாரலிங்கத்தை அழைப்பித்து வைத்து, பாண்டியனின் கீழே முதற் பாளையத் தலைவனாகவிருந்து இராமநாதபுரத்தை அரசாண்ட சேதுபதியுஞ் சமுகமாயிருக்கப் பிரதிட்டை செய்து அதற்குங் கெங்காதர ஐயரையே பூசை செய்யவேற்படுத்தினனென்பர்.

## குலசேகரசிங்கையாரியன்

இவ்வரசன் மதாபிமானியுஞ் சனோபகாரியுமாய் நல்லூர்க் கைலையில் நெடுங்காலம் அரசாண்டு, தன் குமாரனாகிய குலசேகர சிங்கையாரிய னுக்கு[7] முடிசூட்டிவைத்து இவ்வுலகவாழ்வின் ருசி போதுமென்று அவ்வுலக வாழ்வை யாசித்துச் சென்றனர்.

---

7. குலசேகர சிங்கையாரியனுக்கு முதல் வடவிலங்கையை ஒரு சாவக மன்னன்

## குலோத்துங்க சிங்கையாரியன்

குலசேகரன் பின் குலோத்துங்கசிங்கையாரியன் வயனிலங்களைப் பண்படுத்தி வருமானங்களைப் பெருக்கிச் சனங்களைச் சந்தோஷமாக நடத்தி எவரையும் அன்னைபோல ஆதரித்து அரசியல் நடத்திவந்து பின்னர்த் தனது சேயாகிய விக்கிரமசிங்கையாரியன் கையில் அரசாட்சிப் பொறுப்பை ஒப்புவித்துக் காலஞ் சென்றனன்.

## சிங்களவர் கலகம்

விக்கிரசிங்கையாரியன் இராச்சியம் பண்ணுகிற காலத்தில் இங்கே இருந்த சிங்களவருக்குந் தமிழருக்குஞ் சமயகாரியங்களையிட்டுக் கலகம் மூண்டது. அதிலே சிங்களவர் சிலர் தமிழரிற் சிலரைக் காயப்படுத்தி, இருவரைக் கொலை செய்து பிடித்தபிடி விடாத குறடு போன்றவர்களாகி முரட்டுக்குணங்காட்டி நின்றனர். இதை அவ்வேந்தன் அறிந்து தனது கிங்கிரரையனுப்பிச் சிங்களவரைப் பிடிப்பித்து விசாரணை பண்ணிக் கலகத் தலைவனாயிருந்த புஞ்சிவண்டாவையும், வேறு பதினேழுபேரையுங் கொல்லுவித்துப் பின்னுஞ் சிலரைச் சிறைச்சாலையிலடைத்துக் கலகத்தை அமர்த்தினான். அப்போது சிங்களவரிற் சிலர் ஒளிந்து இந்நாட்டைவிட்டு வலசைவாங்கி ஓட்டமெடுத்தனர். இவ்விடத்திலேயிருந்த சிங்களவர், அரசன் தமிழரில் அதிக பட்சங்காட்டி நடந்ததனால் அவனை வெறுத்தார்கள்.

## வரோதயசிங்கையாரியன்

அவனுக்குப்பின் வரோதயசிங்கையாரியன் தன் பிதாவின் அரசாட்சியை ஏற்றுக்கொண்டு மார்க்கவழிபாடுகளைக் குறித்துச் சிலசட்டங்களை ஏற்படுத்தி இருதிறக்குடிகளையுஞ் சமாதானப்படுத்தி அரசியல் தவறாது செங்கோலோச்சித் தன் குமாரனான மாத்தாண்டசிங்கையாரியனுக்குத்

---

ஆண்டுள்ளான். கி.பி. 1247 இல் சந்திரபானு என்ற சாவகன் சிங்கள அரசின் மீது படையெடுத்தான். அவ்வேளை சிங்கள மன்னனாக விளங்கிய இரண்டாம் பராக்கிரமபாகு இந்தப் படையெடுப்பை முறியடித்துச் சந்திரபானுவைத் துரத்தியடித்தான். தென்னிலங்கையில் தோல்விகண்ட சந்திரபானு வடவிலங்கையைக் கைப்பற்றி அங்கு தோன்றியிருந்த இராச்சியத்தின் மன்னனாக விளங்கியுள்ளான். கி.பி. 1262 இல் சாவகமன்னன் போரில் இறக்கவே, யாழ்ப்பாண அரசின் மன்னனாக காலிங்க ஆரியச்சக்கரவர்த்தியின் மகன் குலசேகர சிங்கையாரியன் (பரராசசேகரன்) முடிசூடிக் கொண்டான் எனத் தெரிகின்றது.

தன் சிங்காசனத்தைக் கையளித்து உயிர் நீத்தான். மாத்தாண்ட சிங்கையாரியனும் இராச்சியப் பொறுப்பைச் சுமந்து தன்னிராச்சியத்திலே வித்தியாவிருத்தியும் வேளாண்மைப்பெருக்கமும் வருதற்கேற்ற கருவிகளை அமைத்தான். இன்னும் அவன் வன்னியராலிந் நாட்டாருக்கு நேரிட்ட கலகங்களை அமர்தித்தன் பிரசைகளைத் தாய்போலாதரித்துத் தயாளகுண சீலனாய் அரசாண்டு மங்காப் புகழ்பெற்று மரணமடைந்தான். அவ்வரசன் மரித்த தினத்திற் தமிழருஞ் சிங்களவருமாகிய இருதிறந்தவர்களும்: ஐயகோ! அன்னைபோல எமை ஆதரித்துக் கண்மணியைக் காக்குமிமைபோல எம்மைப்பாதுகாத்து அன்பு பாராட்டிய எம் அரசனை இனி நாம் காண்பதெப்போது என்று அவனது பிரிவை நினைத்துப் பெருமூச்சோடு பிரலாபித்துத் துக்கங் கொண்டாடினர்.

## குணபூஷண சிங்கையாரியன்

பின்பு அவனுடைய மகனான குணபூஷணசிங்கையாரியன் முடிதரித்துத் தன் பெயர்துலங்கப் பிதாவிலும் அதிபிரசா நயாபேட்சியாய்க் கல்வியுஞ் செல்வமும் நாளொருவண்ணம் விருத்திபெற்றோங்கற்கான பலவகை முயற்சிகளைச் செய்து, பராபட்சமின்றிக் கோணாநீதி செலுத்தினான்.

## வீரோதய சிங்கையாரியன்

இந்த மகாத்துமி மனவலியுடையோனாயினுங் கடுமுயற்சியாற் காலந் தள்ளமாளாது சடப்பெலன் குன்றினதாற் தனது மகன் விரோதயசிங்கையாரியனிடம் இராச்சியப் பொறுப்பை விட்டுச் சிலகாலமாறியிருந்து பூரண ஆயிசுபெற்றுத் தேகவியோகமாயினன்.

## வன்னியரை அடக்கல்

வீரோதய சிங்கையாரியன் இராசசியம்பண்ணுங் காலத்திலே சிங்களவராலே அடிக்கடி கலகமெழும்ப அவைகளை அரசன் யூகத்தோடு தனது பராக்கிரமத்தினாலடக்கி இச்சிங்களவரைக் கலகஞ் செய்யத் தூண்டி விட்ட வன்னியர் மேற் படையெடுத்துச் சென்று ‘அடங்காப்பாம்பிற்கு மூங்கிற் கோலரசன்’ என்றாற்போல் ஏழு வன்னியையுங் கொள்ளையடித்தொரு போதும் இவ்வெண்ணங்கொள்ளாதபடி வன்னியரின் கருவத்தைக் கரைத்து அடக்கித் தனது இருப்பிடத்திற்குத் திரும்பினான். திரும்பிவரவே, ஆணவங் கொண்டு நிமிர்ந்து கலகம் பண்ணிய சிங்களவர் ‘இடியேற்றைக்கேட்ட சர்ப்பம்’

போற் கலக்கமுற்று அவனது உபயபாதாரவிந்தங்களிலடியற்ற மரம்போல் வீழ்ந்து கிடந்து, அபயமிட்டதால் அவர்களுக்கு மன்னிப்பு அளித்து நன்முக மாக்கிப் பட்சங்காட்டினான். அக்காலத்திலே மதுரையரசனாகிய சந்திரசேகர பாண்டியன் சத்துருக்களுக்குத் தோற்றரசிழந்து யாழ்ப்பாணம் வந்து, இவ்வாரியனிடஞ் சரண்புகுந்திருந்தான். தன்னையடைந்தோர்க்கபயங் கொடுக்கும் வீரோதயசிங்கன் தனது சேனாதளங்களைத் திரட்டிச் சேதுபதி முதலாகிய தன்னுடைய வீரரோடு மதுரை சென்று, பாண்டியனுடைய சத்துருக்கள் வென்னிட்டோடக் கடும்போர் செய்து சயபேரிகைகொட்டி அரசாட்சியை அப்பாண்டியனுக்கு நிலைப்படுத்தித் திரும்பினன். அதன்பின் வன்னியர் தங்கள்மேல் இவ்வரசன் படையெடுத்து வருவான் என்றஞ்சிக் கண்டியரசனைத் தங்களுக்கு ஏற்றதுணை செய்ய வரும்படி கேட்டார்கள். அவனோ: எம்முன்னோர் அந்நாட்டைப் பரிசாகக் கொடுத்தமையால் அதற்கு விரோதமாய்ப் படையெடுத்து என் குலத்துக்கு அபகீர்த்தி வருவிக்கமாட்டே னென்று மறுத்தான். அதைக்கேட்ட வன்னியர் தாமெண்ணிய கருமஞ் சித்தியா காததைக் கண்டு வீரோதயனைச் சாந்தப்படுத்தும்படி கன திரவியங் கொண்டு வந்து சந்தித்தவனது கடாட்சவீட்சணம் பெற்றுத் திரும்பினர். இந்த வெற்றி வேந்தன் ஆடவப்பராயத்திலே ஓரிரவில் அசனமருந்தி அலங்கரிக்கப்பட்ட சப்பிரமஞ்சத்திலிருந்த பஞ்சணைமெத்தை யிற்றுயிலும்போது சடுதி மரணமடைந்தான். மரணகாரணம் யாதென்றொருவருக்குந் தெரிந்ததில்லை.

## செயவீரசிங்கையாரியன்

அவனுடைய குமாரன் செயவீரசிங்கையாரியன் சிறுவயதிலே முடி தரிக்கப்பெற்று விவேகசாமர்த்தியனாய் அரசியனடத்திச் சத்துருபயமின்றிக் குடியோம்பி மகா கீர்த்தியுற்றான். இவ்வரசன் நெடுங்காலங் கீர்த்திப்பிரஸ் தாபனாய் அரசாண்டு தனது குமாரன் குணவீரசிங்கையாரியனுக்கு முடிக வித்து இராச்சியப் பொறுப்பை யொப்பித்துப் பூலோகவாழ்வை யொருவினன்.

## முத்துச்சலாபம்

அரசன் மரித்தபின்: முத்துச்சலாபத்தைப் பற்றி ஆரியச் சக்கரவர்த்திக்குங் கண்டியரசனாகிய புவனேகவாகுவுக்கும் விவாதமுண்டானபோது அவனுடன் யுத்தம்பண்ணி கி.பி. 1278ல் வருஷம் இலங்கை முழுவதையுந் தனதடிப்படுத்தி வெற்றிக்கொடி தூக்கி[8] யாழ்ப்பாணக் குடைக்கீழ் ஆளுகை செய்த பன்னிரண்

---

*8. கி.பி. 1380 இல் செயவீரசிங்கையாரியன் (செகராசசேகரன்-5) யாழ்ப்பாண அரசனானான். தென்னிலங்கை மன்னரில் ஒருவனான புவனேகபாகுவைப் போரில்*

டாம் வருஷத்திற் பராக்கிரமவாகுவென்னுமரசன், பாண்டியராசனைப் பிணை வைத்து ஆரியச்சக்கரவர்த்தியினிடம் இலங்கை இராச்சியத்தை வாங்கித் திறையிறுத்து அரசாளுவேன் என்று வாக்குப்பண்ணியபடி கண்டியரசர் கொடுத்து வந்த திறையை நிறுத்திய காரணத்தாற் குணவீரசிங்கையாரியன் அவர்களோடு சமராடிச் சிலபகுதிகளைப் பிடித்துத் தமிழ்க்குடிகளை அவ்விடத்திருத்தித் தன்னாணைக்குள்ளாக்கி மதுரையை அரசாண்ட நாயக்கர்களுக்குப் பொருளுதவி செய்து பிதாவைப்போல அரசாண்டு வயோதிககாலத்திற் தனதிராச்சியத்தை மகன் கனகசூரியசிங்கையாரியனுக்குக் கொடுத்துக் காலஞ் சென்றான்.

## கனகசூரியசிங்கையாரியன்

கனகசூரியசிங்கையாரியன் இராச்சியம் பண்ணும் போது சிங்களக் குடிகள், இவனுடைய இளக்காரத்தைக்கண்டு, மேலாட்டங்கொண்டு வன்னியரையுந் துணைப்பிடித்து, 'இளகினவிரும்பைக்கண்ட கொல்லனைப்' போற் கலகம் பண்ணினார்கள்.[9] அரசனோ பயந்து தன் மனைமக்களையுங் கொண்டு ஒளித்தோடி வடதேசம் போனான். அவன் போகவே சமயம் வாய்ந்த தென்றெண்ணி விசயவாகு[10] யென்னுஞ்சிங்களவன்றானே அரசனாகித்

---

வென்று, பன்னிரண்டு வருடங்கள் திறை பெற்றான். எனினும், கோட்டை அரசனாகவிருந்த அழகக்கோணார் என்பான் திறை செலுத்த ஒரு கட்டத்தில் மறுத்ததோடு, சிங்கைநகர் அரசனால் இவனிடம் திறைபெற அனுப்பப்பட்ட ஏவலாளர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றான். அதனால் செயவீரசிங்கையயாரியனின் பெரும்படை தரைமார்க்கமாகக் கம்பளைக்கும், கடல் மார்க்கமாக கோட்டைக்கும் அனுப்பப்பட்டது. கம்பளையரசனான புவனேகபாகு அப்படைக்கு எதிர் நிற்க அஞ்சி ஓடி ஒளிந்தான். கடற்படை தோல்வி கண்டு திரும்பியது.

9. கனகசூரிய சிங்கையாரியன் காலத்தில், தென்னிலங்கையில் கோட்டை மன்னனாக விளங்கியவன் ஆறாம் பராக்கிரமபாகு ஆவான். அவன் தன் வளர்ப்பு மகனான சப்புமல்குமரயா என்ற செண்பகப் பெருமாளைப் பெரும் படையுடன் அனுப்பி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அப்படைக்கு எதிர்கொள்ள முடியாது கனகசூரிய சிங்கையாரியன், தன்னிரு புதல்வர்களுடன் தென்னிந்தியாவிற்கு ஓடிச் செல்ல நேர்ந்தது. சப்புமல்குமரயா யாழ்ப்பாணத்தின் அரசகட்டிலேறியபோது தனது நாமத்தை சிறிசங்கபோதி புவனேகவாகு என மாற்றிக் கொண்டான். நல்லூர் கந்தசுவாமி கோயிலைத் தரைமட்டமாக்கியவனும் இவனே. மீண்டும் கட்டிக் கொடுத்தவனுமிவனே. இவன் நல்லூரிலிருந்து உத்தரதேசத்தைப் பதினேழு வருடங்கள் ஆட்சி செய்தான்.

10. கி.பி. 1467 இல் சிறிசங்கபோதி புவனேகவாகு யாழ்ப்பாணத்தை விட்டு, தென்னிலங்கை செல்லநேர்ந்தது. அவனுடைய வளர்ப்புத் தந்தையாகிய பராக்கிரம

தமிழ்க்குடிகளையொடுக்கி அவர்களுடைய பாவனையாராதனையா வற்றுந் தன் சாதியாரைப்போலாக வேண்டுமென்று கட்டாயம் பண்ணியதற்கு அமை யாதவர்களைத் தண்டித்துப் பதினேழுவருஷம் கொடுங்கோலோச்சினான்.

## மீண்டும் அரசனாதல்

இதற்கிடையிற் பரதேசம்போன கனகசூரியசிங்கையாரியன் தனதிரு நேத்திர மொத்த புத்திரராகிய பரராசசேகரனையுஞ் செகராசசேகரனை யுந் திருக்கோவலூரிற் கலைபயில வைத்துத் தான் தன் தேவியுடன் காசிநகர் பரியந்தஞ் சென்று தலதரிசனை செய்து தீர்த்தம்பலவாடித் திரும்பிக் கோகர்ணத்துக்கு வந்து அவ்விடத்தே சிலகாலம் வதிந்து சிவராத்திரிவிரதம் அனுட்டித்து வீரதோத்தியாபனம் பண்ணினான். பின்பு தன் தனையரைக் காணவேண்டுமென்னும் ஆர்வம் மேலிட்டுத் திருக்கோவலூருக்கு வந்தான். அவ்விடத்திலே வித்தை பயின்று கொண்டிருந்த தன் சேயர் தேகவளர்ச்சி யிலும், அழகிலும், கலைப்பயிற்சியிலும் போர்வலியிலும் புயபலபராக கிராமத்திலும் வளர்பிறைபோல வளர்ந்திருக்கக்கண்டு இவர்கள் நம் பகை களைவரென நினைந்து அதி மகிழ்ச்சியோடு அவ்விருவரையுங் கட்டித்தழுவி முத்தமிட்டனர். அப்பொழுது அன்னை தந்தையரைக்கண்ட மைந்தர்களின் வதனங்களோ, சூரியனைக்கண்ட நளினமலர் போலவுஞ் சந்திரனைக்கண்ட குமுதமலர் போலவும் மலர்ந்து சோதிகான்றன. தனது மைந்தர்கள் சத்துருவைச் செயித்து, இராச்சியத்தை மீட்டுக் கொள்ளப் பண்ணியிருந்த உச்சிதோபாயங்களைத் தந்தை அறிந்து ஆனந்த நிருத்தஞ் செய்து தனது மைந்தருக்கு உதவியாக அவ்விடத்தே இருந்த இராச குடும்பத்தாருக்குச் செய்யவேண்டிய மரியாதைகள் செய்துபசாரஞ் சொல்லி விடை பெற்றுக்கொண்டு மனைவி மக்களுடன் மதுராபுரிக்கு வந்தான். பாண்டிநாட்டைப் பகுதிபகுதியாகப் பிரித்து அரசாண்ட சிற்றரசர்கள் அவர்களுக்குப் போராடலுக்கேற்ற சேனைகளையும், ஆயுத முஸ்தீதுகளை யுஞ் சம்பாதித்துக் கொடுக்க மனமகிழ்ச்சியுடனே துதிசொல்லிப் பெற்றுக் கொண்டு சகல பிரயத்தனங்களோடும் யாழ்ப்பாணம் வந்து மேற்குவாசல் வழியாக உள்ளே புகுந்தனர்.[11]

---

பாகு இறந்துபோக, அவனது பேரன் ஜெயவீரன் கோட்டைக்கு அரசனானான். அதனை விரும்பாத சப்புமல்குமரயா என்ற புவனேகபாகு, விஜயபாகு என்பானை யாழ்ப்பாணத்தின் அரசானாக்கி விட்டு கோட்டைக்கு மீண்டு ஜெயவீரனைக் கொன்று, அரச கட்டிலேறினான்.

11. சப்புமல்குமரயா கோட்டைக்குத் திரும்பிய தருணத்தைப் பயன்படுத்திக் கொண்ட

மின்னாமல முழங்காமல் இடியிடித்தாற்போலக் காத்திராப் பிரகாரம் இவர்கள் உட்புகவே, விசயவாகுவும் முளையைவிட்டுடன்ற சிங்க ஏறு போலெழும்பிக் கருச்சித்து ஓர் இமைப்பொழுதிலே தன் சேனையெல்லாஞ் சேர்த்து அஞ்சாநெஞ்சனாய் இவரை மிஞ்ச விடேனென்று ஆக்கிரமித்து வீரதீரத்தோடு சென்று எதிர்த்தான். இருதிறவீரருங் குமுறொலி செய்து பெருஞ் சமராடினர். அச்சமரிலே விசயவாகுவும் அவன் பெருஞ்சேனையும் அபசெயப்பட்டுப் பரராசசேகரனின் வாட்படைக்கிரையாயினர். செகராச சேகரனோடு எதிர்த்த சேனையும் விசயவாகுவின் வீழ்ச்சி கண்டதே, பூனையைக் கண்டு எலிகள் பாய்ச்சல் எடுத்தாற் போல வென்னிட்டுச் சிதறி வேறுவேறோடினர். செயத்தம்பம் நாட்டிய பரராசசேகரன் தன் பிதாவாகிய கனகசூரியசிங்கையாரியனை அரசியற்ற நிலைப்படுத்தித் தான் தேசவிசாரணை செய்ய முயன்று விசயவாகுவுடன் கூடிய கலகக்கார ரான சிங்களவரிற் சிலரைக் கொன்றான். அதைக்கண்ட சிங்களப்படைகளிற் சிலர் திகில் பிடித்து இலையுதிரும் மரத்திற்கஞ்சிப் பாயும் மான்போலக் கண்டிக்கோட்டமெடுத்தனர். எஞ்சிய சிங்களவர் இவர்களை மிகு பத்தி விநயத்துடன் வழிபட்டு வந்தார்கள்.

## பரராசசேகரன்

அக்காலத்தே பரராசசேகரன் சோழவமிசத்தைச் சேர்ந்த இராசலட்சுமி என்னும் பெண்ணைத் தன் பட்டத்துத் தேவியாகப் பாணிக்கிரகணம்பண்ணி, இல்லறமாகிய நல்லறத்தைச் செவ்வே நடத்தினன். இவன் தாதை இவனுக்கு முடிதரித்துச் சிங்காசனத்தில் வைத்துச் செங்கோலோச்சச்செய்து தான் சிலகாலம் இளைப்பாறிப் பின்னர்த் தேகவியோகமாயினன்.

பின்னும் பரராசசேகரன் பொன்பற்றியூர் முடிதொட்ட வேளாளனாகிய பாண்டியமளவன் மரபிலுதித்த அரசகேசரியின் புதல்வி வள்ளியம்மை யென்னும் பெண்ணை இரண்டாம் மனையாட்டியாகவும், மணவக்குடியிற் பிறந்த மங்கத்தம்மாளை வைப்பாட்டியாகவும் வைத்துக் கொண்டான்.

## மன்னனின் பிள்ளைகள்

இவனுக்குப் பட்டத்துத் தேவியிடம் சிங்கவாகு, பண்டாரம் எனும் இரு சிறாரும், வள்ளியம்மையிடம் பரநிருபசிங்கம் முதலிய நான்கு

---

கனகசூரியனும் புதல்வர்களும் சேனைகளுடன் வந்து விஜயபாகுவைக் கொன்று, இழந்த இராச்சியத்தை மீட்டுக் கொண்டனர்.

மகாரும், மங்கத்தம்மாளிடம் சங்கிலி என்னுமொரு சுதனும் பிறந்தனர். பரராசசேகரன் பாரோர் புகழ் அதி விவேக சாமர்த்தியத்துடனே மனுமுறை சிறிதுந்தவறாமல் அரசாட்சியை நடாத்த, செகராசசேகரன், வித்தியா விநோதனாய்க் கலைகளை அப்பியாசித்து வடநாட்டிலுந் தென்னாட்டிலு மிருந்து தான் சவதரித்துக்கொணர்ந்த சகல சாஸ்திரங்களையும் பிரவிருத்திப்படுத்தி வித்வசபை ஒன்றைக் கூட்டி நூல்களை யாக்குவித்துத் தானும் சோதிடம், செகராசசேகரமென்னும் இரு நூல்களைச் செய்தான்.

அறிஞரால் அரிய நூலென்று எண்ணப்படுகின்ற ரகுவம்சம் என்னும் நூலைப் பரராசசேகரனின் மருமகனும் பரநிருபசிங்கத்தின் மைத்துனனு மாகிய அரசகேசரி என்பவன் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துப் புராண நடையாக்கித் திருவாரூருக்குக் கொண்டு போய் அவ்விடத்திலே யுள்ள வித்துவசபையில் அரங்கேற்றிப் பெருங்கீர்த்தியடைந்தான். இவர்கள் சிங்கையாரியன் என்னும் பட்டத்தைச் சுருக்கித் தத்த நாமங்களுக்கு முன்வைத்துச் சிங்கைப் பரராசசேகரன், சிங்கைச் செகராசசேகரன் என வழங்கும்படி செய்தார்கள். சிங்கைச் செகராசசேகரன் பின்னும் பாண்டி நாட்டிலும், மற்றுமாதீனங்களிலிருந்தும் பல சாஸ்திரங்களை எடுப்பித்துச் சேதுக்கரையிலிருந்து எழுதுவோர்க்குப் படிகட்டி எழுதவித்துக் கொண்டு வந்து இந்நாட்டில் அவைகளை விருத்தியாக்கினான். இந்தக்காலத்தில் யாழ்ப்பாணத்திலே கல்விப்பயிர் செழித்துத் தழைத்தது. அங்குமிங்கும் பல வித்துவான்கள் ஒருவர்பின்னொருவராய்க் கிளம்பச் சிங்கவாகு முதலிய இராசகுமாரர், கலைப்பயிற்சியிலும், படைப்பயிற்சி யிலும், சட வளர்ச்சியிலும் நாளொருவண்ணம் பொழுதொருவண்ணமாக வளர்ந்து வந்தனர்.

## சங்கிலியின் துரோகம்

அவர்களுட் சங்கிலி என்பவன் கபடசிந்தனும், கடுவிவேகியும், அஞ்சா நெஞ்சனும் துட்டநடையும் உள்ளவனாகி மாத்திரை தப்பி நடந்தான். மற்றையோர் ‘குலத்தளவேயாகுங் குணம்’ என்றபடி நல்லொழுக்கமும் உயர்குணமும் உள்ள பிள்ளைகளாயினர். இவர்கள் யாவரும் ஓர் மனையிற் தின்று ஓரிடத்திற் கற்று, ஓர் களரியில் விளையாடி, ஓர் மாளிகையிற் துயின்று வருங் காலத்தில், அரசனின் மூத்த குமாரனாகிய சிங்கவாகுவுக்குச் சண்டாளனாகிய சங்கிலி நஞ்சூட்டிக் கொன்றான். உயிர் அருமை தெரியாப் புலையனாகிய சங்கிலியாற் பட்டத்துச்சுதனான சிங்கவாகு அகாலமரணமடைய அரசன் இரண்டாம் பிள்ளையாகிய

பண்டாரம் என்பவனுக்கு இளவரசப்பட்டஞ்சூட்டி ஆளுகை செய்ய வைத்துத் தனது பரிவாரங்களுடன் கும்பகோணத்திற்குத் தீர்த்த யாத்திரை பண்ணினான்.

## பரநிருபசிங்கனின் வீரம்

அவ்விடத்திலே சோழதேசத்தரசனும் தன் பரிவாரங்களுடன் வந்து வதிந்திருந்தான். அப்போது அங்கே சங்கிலி செய்த குழப்பத்தின் நிமித்தம் அவனையும், பரராசசேகரனையும், பரிவாரங்களையும் சோழராசன் பிடிப்பித்துச் சிறைச்சாலையில் அடைப்பித்தான். சேனைகளோடு பின்னே சென்ற பரநிருபசிங்கம் அதைக் கேள்விப்பட்டு, மாற்றானாகிய சோழனைத் தேடி அவனை எதிர்த்துச் சண்டை செய்து, தன் தேகத்தில் வாறான காயங்கள் வாங்கியும் ஓர் பொருட்டாக எண்ணாது 'சூரனுக்குயிர் துரும்பு' என்றாற்போல வீராவேசங் கொண்டு போராடி விருதுபெற்றுத் தன் தாதை ஆதியரைச் சிறைமீட்டு அவ்விடத்திற் தனது விருதுக்கொடியைத் தூக்கி மூன்றுமாதம் ஆளுகை செய்து பின்பு சோழனுடைய வேண்டகோளின்படி அவனிடத்திலே திறைவாங்க இணங்கி இராச்சியத்தை அவனிடங் கொடுத்துப் பிதா முதலியோரோடு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தான்.

## ஏழூர் பரிசு

பரராசசேகரவரசன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தவுடன் பரநிருப சிங்கத்திற் பாசங்கொண்டு அவனை அழைத்து மேன்மைப்படுத்திக் கள்ளியங்காடு, அராலி, சண்டிருப்பாய், அச்சுவேலி, உடுப்பிட்டி, மல்லாகம், கச்சாய் என்னும் ஏழு கிராமங்களையும் அவனுக்குச் சொந்த மாக அளித்துச் செப்புப்பட்டயமீந்து அரசாட்சியில் இரண்டாம் அதிகாரியாக் கினான். இச்செய்கை சங்கிலிக்கு மனப்புகைச்சலை எழுப்பினாலும் அதை அவன் வெளியிலே பீறவிடாமல், 'ஓடுநீரோடினுறு நீர்வருமளவும் வாடியிருக்குங் கொக்கு' ப்போல அடங்கியிருந்தான்.

## பரநிருபசிங்கனின் கண்டிப்பயணம்

அக்காலத்திலே கண்டியரசனின் மனைவி, அனேக வைத்திய பண்டிதரால் மாற்றமுடியாத வயிற்றுவலியால் வருந்தினள். அதினாலே கண்டி அரசன்: ஓர் நல்ல வைத்தியனைத் தன்னிடம் அனுப்ப வேண்டும் என்று பரராசசேகரனுக்குத் திருமுகமனுப்ப, அப்பரராசசேகரன் வைத்தியர்

சிரோன்மணியாகிய பரநிருபசிங்கத்தைக் கண்டிக்கு அனுப்பினான். அவ் வைத்திய சிங்கன் ஒரே அவுடதப் பிரயோகத்தினால் அவளுடைய வியாதியைப் 'பரிதியைக் கண்ட பனிபோல்' ஓட்டமெடுக்கச் செய்தான். தன் அன்பிற்குரிய பிரியையைப் பற்றிய வியாதியை மாற்றிய இவ் வைத்திய சிரோன்மணியின் நுண்ணறிவின் திறத்தைக் கண்டியரசன் கண்டாகுலித்து வாய் புதைத்து ஆச்சரியவசத்தனாகி, ஆயுள்வேதியனாகிய பரநிருபசிங்கத்திற்கு என்னென் உபகார உபசரணைகள் செய்யன வேண்டுமோ அவைகளை எல்லாம் மனங்குளிரக் கைகள் குளிரச் செய்து மரியாதையுடன் வழிவிட்டனுப்பினன்.

## பண்டாரம் கொலை

அந்தக்காலத்திலே ஒரு நாள் இளவரசனாகிய பண்டாரம் பூங்காவில் உலாவிப் பூக்கொய்து பொழுதுபோக்கிக்கொண்டு வருகையிற் பாதகருபனான சங்கிலி இதுதான் தருணமென்றுன்னிப் பதிவிருந்து இளவரசனை வாளினால் வெட்டிக்கொன்று இராச்சியந் தனக்கே உரித்து என்று வாதாடினான். ஐயையோ! துரோகி! துரோகி! ஈருயிர் எடுத்தபாவி! பிதாவாகிய பரராசசேகரன் இதைக்கண்டு மனக்கிலேசம் அடைந்துந் தன்னுயிரையுஞ் சிதைப்பானென்று அஞ்சி, அறியாதான் போற் பேசாதொதுங்கிவிட்டான்.

## பரநிருபசிங்கன் மந்திரியாதல்

பரநிருபசிங்கமோ நானிருக்குங் காலத்திலே வைப்பாட்டிப்பிள்ளைக்கு இராச்சிய உரித்து எப்படிக்கிடைக்குமென்று, உக்கிரகோபங்கொண்டு ஆக்கிரமிக்கக் 'கருமமே கண்ணாயினான்' அதறிந்தவனிடம் வந்து: 'கேளுமண்ணா, நாமிருவருஞ் சகோதரராயிருக்க இராச்சியமும் இருவருக்கும் பங்கென்பதற்கு எட்டுணையுந் தடையில்லையே: நாங்கள் இருவரும் பேதமுற்றால் இராச்சியத்தை அபகரித்துத் தமதாக்கிக்கொள்ள இதுதான் தருணமென்று வன்னியர் வகைபார்ப்பார்கள். ஆதலால் நாம் அரச உபாயங்கள் நான்கனுள் ஒன்றாகிய சாமத்தைக் கையாடி இப்போ தைக்கு நானே யிராசனாகவும் நீர் மந்திரியாகவுமிருந்து இராச்சியம் பண்ணுவோம். இனிமேல் நல்லொழுங்கு பண்ணிக் கொள்ளலாம்: வருமானமிருவருக்கும் பங்காகவேயிருக்கும். உமக்கு என் பிதாவினாற் கிடைத்த அதிகாரத்தை உமது மகன் பரராசசிங்கத்திற்குக் கொடுத்து என்னுடன் இணங்கி நடந்தால் இராச்சியத்திலே பெரிய காரியங்களைச்

செய்யலாமென்று ‘அடிநாக்கினஞ்சும் நுனிநாக்கிலமிர்தமும்’ வைத்து நயவசனங்களால் அவனை வசப்படுத்தினான். பரநிருபசிங்கமும் ‘நரியின்கையிற் குடலைக் கழுவக் கொடுத்தவன் சீல’ மாய் அதற்கிணங்கி மந்திரித் தொழிலை நடத்தச் சம்மதித்தான். சங்கிலியோ சிலகாலத்திற் குள்ளே சேனைகளைத் தன்வசப்படுத்திக்கொண்டு இனிமேல் நல்ல ஒழுங்குகள் பண்ணிக் கொள்ளுவோம் என்று முன் சொல்லிக் கொண்டபடி, பரநிருபசிங்கத்திற்குக் கொடுத்துவந்த வருமானப்பங்கையும், பரராசசிங்கத் தின் அதிகாரத் தலைமையையும் நிறுத்தி மந்திரி உத்தியோகத்திற்குச் சம்பளம்மாத்திரம் கொடுக்கத் தீர்மானித்து அப்படியேசெய்ய ஆரம்பித்தான்.

## மதமாற்றம்

காரியத்தின் நிலையைக் கண்ட பரநிருபசிங்கம், முன்னே தான் வெற்றி கொண்டு கப்பங்கட்டுவித்த சோழனுக்குக் கடிதம்போக்கி, நீரனுப்பி வந்த திறையை இற்றைநாண்முதல் அனுப்பவேண்டாமென்று தடுத்தான். புறநட்பும் உட்பகையுமுள்ள இவர்கள் அராநட்பினராய் இருக்கையில் வியாபார முகாந்திரமாய் மன்னாரில் வரத்துப்போக்காக இருந்த பறங்கிக் காரர் அங்கேயுள்ள சனங்களோடு பாடிப்பழகித் தங்கள் ரோமான்மார்க்க உபதேசங்களை அவர்களுக்குக்கூட்டி 500 சைவசமயக் குடிசனங்களைத் தம்மதத்திற்சேர்த்துக் கொண்டனர். அதனாலே சங்கிலி என்பவன் ரோமான் மார்க்கத்திற் சேர்ந்த அனைவரையும் ஆண் பெண் குழந்தை என்ற பேதமின்றி கி.பி. 1544ம் வருஷம் வெட்டுவித்துப் போட்டான். அஃதன்றி இந்நாட்டிலிருந்த புத்தசமய ஆலயங்களெல்லாவற்றையும் இடிப்பித்தழித்துச் சிங்களவரும் இங்கிராதபடி முழுப்பேரையுந் துரத்தி விட்டான். அந்நாண் முதலிந் நாண் மட்டும் யாழ்ப்பாணத்திற் சிங்களவர் இருந்ததில்லை.

முன் விசயவாகுவின் கீழ்ச் சேவுகராயிருந்த யாவகரையும் யாவகச் சேரியை விட்டப்புறப்படுத்தினான். யாவகச்சேரி பிற்காலத்திலே சாவகச்சேரி யென வழங்கப்பட்டு வருகின்றது. ‘விழுதலுக்கு முன் அகங்காரமுண்டா கும்’ என்னும் விவிலிய சுருதிச் சுலோகப்படி இவனிடத்தில் ஆணவக்குணம் மேலிட்டதாற் பலராலும் பகைக்கப்பட்டான். ‘ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்’ என்ற ஔவைவாக்கைப் படித்துப் பார்த்தானில்லை.

சிங்களவர் யாவகர் இந்நாடுவிட்டுப் போகத் தென்னாட்டிலிருந்து நாற்பத்தொன்பது வன்னியர் மரக்கலமேறி யாழ்ப்பாணம் வருகையிற் சட்டெனவோர் சுழிக்காற்றடித்தபடியால் நெடுந்தீவிற் கடலில் அத்தனை

வன்னியரும் அமிழ்ந்திப் போனார்கள். அவர்கள் மனைவியரும், கரைப்பிட்டி வன்னியனுமவன் மனைவியாகிய அம்மைச்சிநாச்சியும் பணிவிடைக்காரருங் கனதிரவியங்கொண்டு வேறு மரக்கலங்களிலேறிவந்து யாழ்ப்பாணத்தில் இறங்கினார்கள்.

## வன்னியர்

கரைப்பிட்டி வன்னியன் கந்தரோடைக்கு வந்தங்கே குடியதியாகி அறுபது கத்திக்கார நம்பிகளனுதினந் தன்னைச் சேவித்துவர வாழ்ந்து, மற்ற வன்னியரின் வரவையவாவுடன் காத்துக் கொண்டிருந்து காலம்விட்டு வந்தான். நாற்பத்தொன்பது வன்னியரும் ஆழியிலமிழ்ந்திய செய்தி யிவர்களுக்குத் தெரிந்திலது. ஆகையால், அவர்கள் மனைவியராகிய வன்னிச்சிகள் கந்தரோடையிற்றானே வீடுகளைக் கட்டியிருந்து தம் நாயகரின் வரவை அபேட்சித் தெதிர்நோக்கியிருந்து தத்தம் வேலையாட் களின் உதவிபெற்றுச் சீவனம் பண்ணினார்கள். கரைப்பிட்டி வன்னியன் தன்கீழ்ச் சேவகஞ்செய்த தலைமையான நம்பியின் மகளில் ஆசை கொண்டு:

'காணிற்குடிப்பழியாங்கையுறிற்கால்குறையும்
மாணின்மைசெய்யுங்காலச்சமா - நீணிரயத்
துன்பம்பயக்குமாற்றுச் சகரி நீகண்ட
வின்பமெனக்கெனைத்தாற்கூறு' (நாலடியார்)

என்னு மான்றோருரையை மறந்து, அவளுடைய கற்பை அழித்தான். தன் மகளுக்குவந்த மானபங்கத்தையறிந்த நம்பி மூங்கிற்காட்டிற் பற்றிய தீப்போற் கோபம் மூண்டெரியத் தன் யசமானனென்றும் பாராதபிமானங் கொண்டெழுந்து வன்னியனைக் கொன்று பழிவாங்கி அவனுடற் செந்நீரைப் பூமியிற் பாயச்செய்தான். அற்பவாசையை அடக்கலாற்றாது தன் பத்தா கொல்லப்பட்டதைக்கண்ட அம்மைச்சிநாச்சி பயந்து நடுங்கிக் காதலன் பிரிவை நினைத்துத் துயர்கொண்டு மனந்தளர்ந்து தற்கொலை செய்திறந் தாள். நம்பிகள் தலைவனும் இராசவிசாரணைக்குள்ளாகிக் கொலையுண் டான். வன்னியனின் திரவியசம்பத்தெல்லாஞ் சங்கிலியரசனுக்காயின. மற்ற நம்பிகள் சீவனார்த்தத்திற்கு வழியின்றிச் சாணாரக்குப்பம் என்னும் அயற்கிராமத்திற்குப் போய் அங்கேயிருந்த சாணாருக்குப் பணிவிடை காரராகிப் பனையேறுந் தொழில் பயின்று படிப்படியே அத்தொழிலைத் தங்கள் தொழிலாகக் கொண்டு சீவனம் பண்ணி வந்தார்கள். அவர்கள்

தங்கள் குலசாரத்தை விட்டு விலகினதால் நழுவரென்றும் பிற்காலத்திலே நழவரென்றும் அழைக்கப்பட்டார்கள்.

## மறவர் வருகை

இந்தக் காலத்திலே இராமநாதபுரத்திலிருந்து சில மறவர் வந்து மறவன்புலவிற் குடியாய்த் தங்கியிருந்து உண்ணாடுகளில் வந்து நுழைந்து பெருங்களவரண்டு சனங்கள் மனதைக் கலக்கினார்கள். ஆனாற் சங்கிலி அவர்களிற் பலரைப் பிடித்துக் கொல்லுவிக்க, எஞ்சிய மறவரஞ்சி அவ்விடம் விட்டோடினர். மறவர் வாசம்பண்ணின விடமாதலால் அவ்விடம் மறவன்புலம் என்றழைக்கப்பட்டது. பின்னும் வடநாடு தென்னாடு முதலிய இடங்களிலே பெரும் பஞ்சமுண்டுபட்டதாற் பலவருணத்தவர்களும் எடுபட்டிந்நாட்டிற்கு வந்து அங்கங்கே வாசம் பண்ணினார்கள்.

## வடமராட்சிக்கலகம்

இப்படியிருக்குங் காலத்திலே, தற்காலத்திலே வடமிறாட்சியென்றழைக் கப்படும் வடமராட்சியிலே சனங்களுக்குள்ளே ஓர் ஊர்க்கலக முண்டாயிற்று. அதையறிந்த சங்கிலி அக்கலகத்தையடக்க வெண்ணி அரசருக்குரிய வரிசைவாத்தியங்களுடனே சென்று கலகத்தை யடக்கித் திரும்பி வருகையில் இருபாலை எல்லை கடந்தவுடன் வாத்தியகாரர் தொனியை நிறுத்தினர். அப்போது யாதுகாரணத்தாலோ வாத்தியத் தொனியை நிறுத்தினீர்கள் என்று சங்கிலியரசன் வினாவ வாத்தியக்காரர்: இது பரநிருபசிங்கத்தின் ஆட்சிக்கு எல்லை ஆதலால் உத்தரவின்றித் தொனிசெய்யப் பயந்தோமென்று உத்தரங் கொடுத்தனர். அந்நாட் தொடங்கிச் சங்கிலி பரநிருபசிங்கத்திற்குரிய கள்ளியங்காடு முதலாம் ஏழு கிராமங்களையும் கவர்ந்து கொள்ள யோசித்துச் சூழ்ச்சிகள் செய்தும், அவன் கையிற் செப்புப்பட்டயமிருந்தபடியால் முடியாதபலமாயிற்று. சங்கிலி இராசவதிகாரஞ் செலுத்தியும், முடியுஞ் செங்கோலும் பரராசசேகரனிட மிருந்தமையாற் தனக்கொரு முடியுஞ் செங்கோலுந் தேட ஆலோசித்துங் காரியம் பிரதிகூலமாயிற்று.

## வன்னியர் துணை

பரராசசேகரன் வன்னியரைத் துணைப்பிடித்துத் தனது மகன் பரநிருப சிங்கத்திற்கு முடிசூட்ட எண்ணமுற்று வன்னியருடன் கொண்டாட்டம்

பூண்டான். அதைச் சங்கிலி அறிந்து தனக்கு நட்டம்வருமென்றஞ்சித் தான் நிறுத்திவைத்த வருமானப் பங்கைப் பரநிரபசிங்கத்திற்கும், கிராம அதிகாரப் பொறுப்பை அவன் மகன் பரராசசிங்கத்திற்குங் கொடுக்க உடன்பட்டுக்கொண்டு அவர்களைத் தன்வசப்படுத்தினான்.

## முதலிப்பட்டம்

அஃதன்றி அவர்களுக்கிருந்த இராச நாமங்களைத் தந்திரமாக மாற்றி, வேளாளருக்கிருந்த முதலிப்பட்டத்தை அவர்கள் பெயரினிறுதியிற் சேர்த்துப் பரநிருபசிங்கமுதலி, பரராசசிங்கமுதலியென வெழுதிவைத்து, அவர்களுக்கும் அவர்கள் பிற்சந்ததியாருக்கும் ஐந்நூறு கிராமத்திற்குத் தலைமைபெற்றுக் காப்பாற்றுதலென்று அருத்தங்கொள்ளும் மடப்பளி யென்னும் பட்டமுஞ் சூட்டினான். தற்காலம் உயர்குல மடப்பளியாராய் ஆங்காங்கு விளங்குவோர்தாம் இவ்விராச மடப்பளியைச் சேர்ந்தோரென்று பாராட்டுவர்.

## பரராசசேகரனின் திரவியங்கள்

அதன்பின் சங்கிலி சேனைகளையும் ஆயுதங்களையுஞ் சேர்த்துப் பலங்கொண்டதைப் பரராசசேகரன் கண்டு, விள்ளரிதாயுள்ளங்கலங்கி, வெல்லுதற்கு வழியில்லையென்றுன்னி, தன் திரவியங்களையெல்லாம் யானைகளிலேற்றிக் கொண்டுபோய் வன்னிநாட்டைச் சேர்ந்து ஒரு பெருங் காட்டுக்குள்ளே முன்னோர் திரவியஞ் சேமித்து வைத்தவிடத்திற் தானுஞ் சேமித்து வைத்தவற்றோடு முடியையுஞ் செங்கோலையுங் கூட வைத்துத் திரும்பிவந்து தனது மாளிகையிலிருந்தான். ஒருவரையொருவர் எப்போது சதிக்கலாமென்று உள்ளெண்ணமிருந்துந் தலையை விழுங்கத் தருணம் வாயாமையாற் தம்பகையை வெளியிற்காட்டாமற் சங்கிலியும் பரநிருப சிங்கமும் அராநட்பினராயிருந்தனர்.

## பறங்கியர் உறவு

சங்கிலியின் அதிக்கிரம உக்கிரம் அதிகரித்துவர, மன்னாரிலே ரோமான் கத்தோலிக்க மார்க்கத்திற்சேர்ந்த அக்குடிகளைக் கொல்லுவித்த முற்பழிக் கேற்ற பதிலளிக்க முயன்று சவேரியாரென்னும் பறங்கிக்காரன், தன் சாதியார் யாழ்ப்பாணத்திலுலாவி அந்நாட்டார்க்குத் தன் சமயயோச னையை யூட்டுவிப்பதுகருதி முயன்று தன் எண்ணத்தை நிறைவேற்று

வதற்கு இதுதான் ஏற்ற தருணமென்று சங்கிலியின் பகைஞனான பரநிருபசிங்கத்துடன் எழுத்துமூலமாய்க் கொண்டாட்டம் பண்ணினான். பரநிருபசிங்கமும் இனி இராச்சிய வதிகாரம் தனக்கு வராதென்று நிச்சயித்துக்கொண்டு 'நாய் கொண்டுபோன பானையை யார் கொண்டு போனாலுமென்ன' என்ற வழக்கியல்போல அரசாட்சியைப் பிறருக்காக்க எண்ணங் கொண்டான்.

## அப்பாவின் மகள்

இப்படியே சம்பவம் நிகழுங் காலத்துத் துன்மதிக்குறைவிடமான சங்கிலி தனது மந்தியாகிய அப்பாவின் மகளினது சௌந்தரத்தைக் கண்டு அவள் கற்பையளிக்கக் கருத்துற்றான்.

'கொலையஞ்சார் பொய்நாணார் மானமுமோம்பார்
களவொன்றோவேனையவுஞ் செய்வார் - பழியோடு
பாவமிகுதென்னார் பிறி மற்றென்செய்யார்
காமங்கதுவப்பட்டார். (நீதிநெறிவிளக்கம்)

அப்பா சங்கிலியின் பாதக எண்ணத்தையறிந்து பரநிருபசிங்கத்திடம் வந்து, தனக்குற்ற கிலேசத்தை வெளிவிட்டுத் தன் மகளுக்கு அடைக்கலங் கொடுத்தாதரித்து, எப்படியுந் தன் மானத்தை இவ்வேளை காத்துத் தர வேண்டுமென்று மிக மெலிந்து கெஞ்சினான். இவனும் இதே தருணமென்று 'காற்றுள்ளபோதே தூற்று' என்னும் பழமொழியை யோர்ந்து, தன் பகைவனான சங்கிலியைச் சதிக்கும்படி 'பழம் நழவிப் பாலில் விழுந்தா' லொத்துத் தன்னிடம் வந்த மந்திரியோடனுதபித்து அவன் மனதைக் கவர்ந்து, தன் பட்சமாக்கி, அவன் மகளுக்கு அடைக்கலமீந்து இங்குள்ள சம்பவங்களையெழுதி இவனிடங் கொடுத்து, ஊர்காவற்றறையில் வந்திறங்கியிருந்த காக்கைவன்னியனுக்கு நிருபமனுப்பினான். இவன் கொண்டு சென்ற நிருபத்தை வாசித்தோர்ந்து உத்தரம் வரைந்தனுப்பிப் பின்பு காக்கைவன்னியன் தரங்கன்பாடிக்குப் போய், அங்குள்ள பறங்கிக் காரரைச் சந்தித்து: வாருங்கள் யாழ்ப்பாணத்தைப் யாளுங்கள், உங்கள் விரோதியாகிய சங்கிலியைச் செயித்து அதைப் பிடிப்பதற்கேற்ற உதவி செய்வேனென்று சத்தியமும் பண்ணிக் கொடுத்தான்.

## பறங்கிகள் கோரிக்கை

இந்த விடத்தைக்கண்ட பறங்கிகள் முன்பு வியாபார விருப்பைக்காட்டி

இங்கில்லாத பல சாமான்களையுங் கொண்டு, சந்நியாச வேஷம்போட்டு வந்தாற்போற் பண்ணைத்துறையில் வந்திறங்கிச் சங்கிலியரசனிடஞ் சென்று தாங்கள் யாழ்ப்பாணம் வந்து வியாபாரம்பண்ண உத்தரவு வேண்டுமென்று கேட்டார்கள். சங்கிலி முன்பு சம்மதியாதிருந்தும், பரநிருபசிங்கமும் மந்திரியாரும் ஒருமித்துநின்று இப்படிப்பட்ட வியாபாரப் போக்குவரத்து எந்தேசவிருத்திக்கு அனுகூலமும் அவசியமுமாகும்: இங்கில்லாத நூதனப் பொருள்கள் வரவும், இங்குள்ள பல சாமான்களை அங்கனுப்பவும் மிக வசதியாயிருக்குமேயென்று மென்மேலுஞ்சொல்லச் சங்கிலியும் ஏவப்பட்டு ஒருமனமாகிப் பறங்கிக்காரரையழைத்து நீங்கள் இராக்காலத்திலே ஊருக்குட் தங்காமல் உங்கள் தோணிகளில் உண்டுறங்கிப் பகற்பொழுதிற் தரையிலே இறங்கி வியாபாரம் பண்ணலாமென்று உத்தரவு கொடுக்க, அவர்களும் அப்படியே சிலகாலம் வியாபாரஞ் செய்தார்கள். கூடாரமிட்டு உல்லாமாய்ப் படுத்திருந்த அராபியனிடம் தன் மூஞ்சியைமாத்திரம் உட்புகுத்திக்கொள்ள இடங்கேட்டுப் பெற்றுக்கொண்ட ஒட்டகத்தைப் போல வியாபாரம் பண்ண இடம்பெற்ற பறங்கிகள், சங்கிலி சம்பிரமமாயிருக்குங் காலத்தொருதினம் பட்டுவஸ்திரம், பல நூதனப்பொருள்கள் கொணர்ந்து கொடுத்து அரசனைச் சந்தோஷப்படுத்தி: ‘மகாராசனே! மன்பதைக் காதரவே, நாங்கள் மரக்கலங்களிற் பாகம்பண்ணுவதும், புசிப்பதும், நித்திரைசெய்வதும் மிக வருத்தமாயிருக்கின்றதே: ஆதலாற் கடலோரத் திலே நாங்கள் தங்கவும், வியாபாரப் பொருள்களை வைத்தெடுக்கவுமாக ஒரு வீடு கட்டிக்கொள்ள உத்தரவு தரவேண்டுமென்று பிரார்த்திக்கச் சங்கிலியரசனும் ‘நக்குண்டார் நாவெடார்’ என்ற முதுமொழிப்படி இவர்கள் வசப்பட்டு நீங்கள் உண்ணாட்டிற் கட்டாது தென்கரையோரமாய் ஓர் சிறு வீடு மாத்திரங் கட்டிக்கொள்ளலாமென்று ஆக்கியாபித்தான்.

## பண்ணைக்கோட்டை

பறங்கிக்காரர் அதையே சாட்டாகக்கொண்டு ‘ஊசி செலுத்த விடங் கேட்டு உலக்கை புகுத்தினாற்’ போற் கடலருகிலே மண்ணினாற் பெலனும் விஸ்தாரமுமான ஓர் கோட்டை கட்டி அதிற் தங்கள் சேனைகளையும், ஆயுதங்களையும் நிரைத்துக் காலம் வருமளவுங் கெட்டித்திருந்தார்கள். அதற்குத் தெற்கே கடலும், மற்ற முத்திசைகளும் மனிதர் போக்குவரத்துப் பண்ணக்கூடாத பெருங் காடுமாயிருந்தமையால் இச்செய்தி அரசனுக்குத் தெரியாதிருந்தது.

சிலகாலஞ் சென்றபின் ஓர்நாளிற் பயிரிடுங் குடிகளானோர்

அரசனிடஞ்சென்று, அவனது பாததாமரைகளை வணங்கி: 'எம் பெருமானே, நாம் பத்து விரலும் பதற நிலஞ்செப்பனிட்டு, வெயில் காற்று மழைகளால் வரும் இக்கட்டுக்களைச் சகித்து எஞ்சிய தாபரிப்புக்கென்று விதைத்த பயிர்களைக் காட்டுமிருகங்கள் வந்து அதஞ்செய்கின்றன'வென்று விண்ணப்பம் பண்ணினதால், சங்கிலி நாட்டில் வந்து பயிர்களைக் கெடுக்கும் காட்டுமிருகங்களை நிக்கிரகம்பண்ணுதற்கேற்ற எத்தனங்களோடு சேனைகளைச் சேர்த்துத் தானுங் கோதண்டபாணியனாய்க் காட்டினுட் சென்று ஆங்காங்குலாவி வேட்டையாடி வருகையிற் பறங்கிகளாற் கட்டப்பட்டிருந்த கோட்டையையும், சேமித்து வைத்திருந்த ஆயுத முஸ்தீதுகளையும், நாட்டப்பட்டிருந்த கொடிகளையும் கண்டு துணுக்குற்றும், இதேதென் றாச்சரியவசத்தனாகி அவ்விடம்போய் அங்குள்ள ஆயதங்களனைத்தையும் கண்டு பறங்கிகளைப் பார்த்து: 'நீங்கள் இப்படிச் செய்ய உத்தரவு தந்தவன் யாவனென்று, மனம்புழுங்கக் கண்கள் சிவக்கக் கோபாக்கினிமண்டி ஆக்கிரமித்துச் சீறிக் கேட்டான். அவர்களும்: 'அரசனே, நீரல்லவா நாமிப்படிச்செய்ய இடங்கொடுத்தீரென்று மாறுத்தரங் கொடுத்தனர். அவ்வுத்தரம், நெருப்பெழக் காய்ச்சுப்பட்ட விரும்பு நாராசத்தைச் செவியுட் புகுத்தினாற்போலிருந்ததால் அரசன் கொதித்தச் சினந்து: 'ஓர் சிறுவீடு கட்ட உத்தரவுதந்தனன்றிக் கோட்டைகட்ட உத்தரவு தந்தேனல்லன்: இக்கணமே இவைகளைப் பொடிபடவிடியுங்கள், கொடிகளைப் பிடுங்குங்களென்று அவர்களில் நெருக்கினான்.

பறங்கிகள் இவனுடைய கொச்சிதத்திற்குக் கீழ்ப்படியாததனால் அரசன் பலவந்தம் பண்ணியும் அவர்கள் அஞ்சாது மிஞ்சி முரட்டுக்குணங் காட்டினர். இதுவே இவ்விருபகுதியாருக்குள்ளும் பிரிவினையையும் யுத்தவெத்தனத்தையு முண்டாக்கிற்று.

## முதல் யுத்தம்

'எண்ணாத வெண்ணமெல்லா மெண்ணி மனம் புண்ணான' சங்கிலி போர்க்கறை கூவி நல்லூர்க்கோட்டையின் குடதிசைப்புறத்தே வீரமாகாளியம்மை கோவிலின் முற்புறத்திருந்த வெளியையே போர்க்களமாக நியமித்து யுத்தவாரம்பநாளும் விளம்பரம் பண்ணினான். விளம்பரப்படியே இருதிறச் சேனைகளுந் தத்தமாயுதங்களின் கறை நீக்கி யுத்தசன்னத்தராய் வந்து கிழக்கே சங்கிலியின் சேனையும், மேற்கே பறங்கிப்படைச் சனங்களும் பாளயமிறங்கினர்.

உதயபாகத்து நின்ற சேனாவீரர் வாள், வேல், மழு, தோமரம், ஈட்டி முதலிய வாயுதங்களைத் தத்தம் பரணிகளிலேந்தி யணிவகுக்க, அத்தமனபாகத்திலுள்ள சேனாவீரர் தத்தங் கரங்களிற் பளீரென்றிலங்கிப் பகைவரைக் கலக்குந் துப்பாக்கிகளேந்திக்கொண்டு அணிவகுக்க யுத்த மாரம்பமாயிற்று. கிரமப்படி போர்க்களத்துட் சென்ற இருதிறச் சேனைகளின் போர்ப் பரீட்சையும், ஆயுதவெத்தனங்களும் வித்தியாசப்பட்டிருந்தமையால் அவர்கள் கோலங்களும் வேறுபட்டிருந்தன. பறங்கிகள் யுத்தஞ்செய்யும் போது ஒருவன் துப்பாக்கி நீட்டி இலக்குப்பிடிக்க, மற்றொருவன் பற்று வாய்க்கு நெருப்புவைக்கச் சிலமுறை திரிவாய் கத்தரித்துஞ் சிலமுறை வெடிதீர்ந்தும் எதிர்ச்சேனைகளைக் கொன்றுங் காயப்படுத்தியுங் குற்றுயிராக்கியும் நெருக்க, தமிழ்ச்சேனைகள் தத்தங் கைப்படைகளோடு எதிரிசேனையில் விழுந்து வெட்டியுங் குற்றியும் அடித்துங் கைசலிக்க, தன் சேனையின் தளர்ச்சிகண்ட சங்கிலி தன்னுடனின்ற நானூறு துணை வீரரோடு உள்ளணியிற் பாய்ந்து கடும் போர்செய்து தன்சேனைக்குற்ற விளைப்பை மாற்றினான்.

இவ்வண்ணமே ஆறுநாளும் கடும்பூசல் நடந்ததினாற் பறங்கிச்சேனை நாளுக்குநாட் குறைந்து ஏழாம்நாட்போரில் அபசெயப்பட்டு இனியென்ன? நமன் பாசத்தில் அகப்பட்ட உயிர்போலச் சங்கிலியின் கையில் அகப்பட்டு மடிவதன்றி வேறுகெதியில்லையென்று மனத்தளர்வுற்றபோது, பறங்கிகட்கு இவ்விபத்துண்டாயிருந்ததைத் தரங்கன்பாடியிலுள்ள பறங்கிகளறிந்து தன்னினச் சேனைக்குச் சகாயமாக அனுப்பியவோர் துணைச்சேனை துப்பாக்கி முதலிய யுத்தவெத்தனத்தோடு வந்து சேர்ந்தது. அதைக்கண்ட பறங்கிகள், குற்றுயிரான சிங்கங்களை தெளிந்து பெலன் கொண்டு கெர்ச்சித்தாற்போலப் புதுப்பெலனோடு தைரியங்கொண்டு மறுபடியுஞ் சண்டைசெய்ய வாரம்பித்தனர். சமத்திற்குச் சனியன் போல அவர்கள் துப்பாக்கி நெருப்புப்பற்றாமற் தாமதப்பட்டது. அதினால் எதிரிசேனையை வெல்வதரிதென்று எண்ணித் தத்தமுறைகளிலிருந்த வாள்களையிழுத்து வாருங்கள் உமதுயிரை எடுக்கிறோமென்று சபதஞ் செய்துநிற்க, தமிழ்ச்சேனைகளும் அபிமானங்கொண்டு தத்தமாயுதங்களோடெதிர்த்து அஞ்சாது யுத்தஞ் செய்தனர். பரநிருபசிங்கமும் மந்தியாரும் நிர்விசாரி களாய் 'மாமியார்தலையிற் கையும் வேலிக்கப்பாற் கண்ணு'மாயிருந்ததைச் சங்கிலி கண்டு பத்தாம்நாட் போரில் இவர்களைப் பார்த்து, 'நீங்கள் ஒரு முயற்சியுஞ் செய்யாது நிற்பதென்னவென்று குறைகூறப், பரநிருப சிங்கம் முதலானோர்: முன்னொருபோதும் நாம் பயின்றிராத நூதன

வகைபோலிருப்பதனால் எங்கள் சமர்த்திதிலே செல்லாதென, அரசன் நகைத்து: நானும் இப்போரை முன்னறியேன், இருந்தும் என் வல்லமையை நின்று பாருங்களென்று சொல்லித் தன் துணைவீரரோடு 'மான் கூட்டத்திற் புலித்திரள் பாய்ந்தாலொ' த்துச் சத்துருசேனையிற் பாய்ந்து அவர்களைச் சின்னாபின்னப்படுத்தி அன்றைத்தினம் ஆயிரத்தெழுநூறு பேரின் சிரசைக் கொய்து, அவர்களாவியை மறுமைக்குப் பயணமனுப்பி மீண்டான்.

## பதினோராம் நாட்போர்

பதினோராம்நாளும் இருதிறச் சேனைகளும் எதிர்த்து யுத்தஞ்செய்ய, தமிழ்ச்சேனை சற்றுப் பின்வாங்குவது கண்டு சங்கிலியுந் துணைவீரரும் யானைக்களத்துட் சிங்கக்குழாம் புகுந்தாலொத்துக் கெற்சிதத்தோடு பறங்கி சேனையுட் புகுந்து இரண்டாயிரத்து நானூறு பேரையுஞ் சேனைத் தலைவனையுங் கொல்ல, நின்ற சேனை புறங்கொடுத்தோடின. 'தன்னிலத்திற் குறுமுயறந்தியிலும் வலியது' ஆதலாற் சங்கிலியின் சேனை எதிர்ச்சேனைகளை மடங்கடிக்கப் பின்னிட்டோடினோர் இவர்களும் பின் துரந்துவருவது கண்டு மேற்குத்திசையை நோக்கியோடிக் காட்டுணுழைந் தொழித்துவிட்டார்கள்.

## கோட்டை இடிபடல்

சங்கிலியுஞ் சேனைகளும் போய்ப் பறங்கிகள் கட்டின மண்கோட்டையை யிடித்துத் தரைமட்டமாக்கி அங்கிருந்தவர்களையும் வெட்டிக்கொன்று திரவியங்களையுங் கொள்ளையிட்டுத் திரும்பினார்கள். சேனைத்தலைவன் வென்று திரும்பிவந்தவுடன் வீரமாகாளிகோவிலிற் தனது நியமநிட்டைகளை முடிக்க நின்றுவிடச் சேனைகள் போர்வென்ற மிகு சந்தோஷத்தாற் களிப்புற்றுமூர்க்கவெறிகொண் டொருவரையொருவர் அடிக்கவும் வையவுந் தலைப்பட்டதாற் பெரிய வாரவாரமுண்டாயிற்று. அதை யடக்க வரசன் ஆட்களையனுப்பியும் அடக்க முடியாததனாற் கோபதீபனாகி யவர்களுக் குச் சமைத்துவைத்த போசனங்களையெடுத்து வெட்டிப் புதைப்பித்தான். அது அவன் சேனைகளுக்கு மிக வெறுப்பை யுண்டாக்கிற்று.

## காக்கைவன்னியன் சதி

இதுநிற்கத் தோற்றோடிய பறங்கிக்காரர் ஊர்காவற்றுறைக்குப் போய் வன்னியனைப் பிடித்து: 'உன்னை நம்பிப் போரிலேற்பட்டுப் பதினாயிரத் துக்கு மேற்பட்டவர்களை யிறக்கக் கொடுத்தோமே, நீ எங்களை

அழைத்துவந்தும் யாதொரு உதவியுஞ் செய்யாமல் விட்டதால் உன்னைக் கொல்வதே எங்கள் தீர்மானமென்று 'காய்ந்த புலி ஆளிற்பாய்ந்தாற்' போல் அவனி னெருங்கினார்கள். அச்சமயத்திற் பரநிருபசிங்கம் பறங்கிகள் அபசயப்பட்டதையும் தாங்கள் அந்தரங்கத்திற்செய்த சகாயம் வாயாமற் போனதையும் நினைத்து விசனப்பட்டினி நாங்கள் வெளியாய் நின்று பறங்கிகளுக்குத் துணைசெய்ய எனக்கு உதவிபண்ண வேண்டுமென்று எழுதிய நிருபங் காக்கைவன்னியனுக்குக் கிடைத்தது. அவன் அதை வாசித்தபொழுது பறங்கிகளுக்கு மனத்திருத்தியுண்டாயிற்று. வன்னியன் பறங்கிக்காரரை அணிவகுத்து மற்றநாள் யுத்தத்திற்கு எத்தனமாய் வரும்படி சொல்லி, அன்றிரவு பரநிருபசிங்கத்தைக்கண்டு ஆலோசனை பண்ணிக் கொண்டவ்விடம் போய் மறைந்திருந்தான்.

## வன்னியன் துரோகம்

மறுநாட் காலையிற் பறங்கிகள் காக்கைவன்னியன் சொற்படிவந்து மேற்குவாசலை வளைந்தணிவகுத்து நின்றார்கள். சங்கிலி அதை அறிந்து சேனைகளைத் திரட்டித் தானுமணிவகுத்துத் துணைவீரருடன் முன்னணியி னின்றான். அதைக் காக்கைவன்னியன் கண்டு, வேஷம்மாறி உபாயமாய்ச் சேனைக்குணுழைந்து சமீபத்தினின்றான். பக்கத்தினின்ற பரநிருபசிங்கந் தான் இரவில் வன்னியனுடன் யோசித்துக் கொண்டபடி வாய்ச்சமாளிப்புள்ள ஒருவனைத் தூரத்தினிறுத்தி வேறொருவனைச் சேனாதிபதியிடம் அனுப்பிப் போருக்கடுத்த அந்தரங்காலோசனை சொல்லும்படி இன்னானின்னவிடத் திலும்மைத் தேடிக்கொண்டு நிற்கிறானென்று சொல்லுவித்தான். சேனாதிபதியும் அதையறிய ஆவலுற்றவ்விடஞ் செல்ல அங்குநின்ற சமாளி வாசாலமாய் இவன் மனதைக் கவரத்தக்கதாகப் பேசிச் சேனாதிபதி யைத் தடுத்து நிற்க, அதுசமயமறிந்து காக்கைவன்னியன் தன்னுடையை மாற்றிச் சுயகோலத்தோடரசன் முன் வெளிப்பட்டான். அரசன் வன்னிய னைக்கண் டெதிர்கொண்டோடி: என் மேற்றயவுவைத் துதவிசெய்ய விப்பொழுது தான் வந்தீரோவென்று சொல்லி அவனைக்கட்டி முத்த மிட்டான். 'சிங்கி குளிர்ந்து கொல்வது' போல வன்னியனுஞ் சிநேக பாசாங்குபண்ணிக் கட்டி முத்தமிடுபவனைப் போலக் கட்டிப்பிடித்து பிடித்தபிடிவிடாது உறுதியாய்ப் பிடித்துக் கொண்டான்.

## சங்கிலி கைது

பறங்கிகள், இதுதான் தருணமென் றரசனிடமோடி வருகிறதைத்

தமிழ்ச்சேனைகள் கண்டு, ஆயுதமெடுத்துப் போர்செய்யவெத்தனப்படுவதை அறிந்து சேனாதிபதியினுத்தரவின்றி ஒருவனுமாயுதந் தொடப்படாதென்று, உள்ளாளுங் கள்ளாளுமாக நின்ற பரநிருபசிங்கந் தடுத்தான். தமிழ்ச் சேனைகள்: எங்களுக்காயுதமெடுக்க வுத்தரவில்லையேயென்று சத்தமிட் டலறிக் கொள்ள அரசனையும் வன்னியனையு மந்தநிலையில் விட்டோடி னார்கள். பறங்கிகள் சங்கிலியைப் பிடித்து விலங்கிட்டுச் சேனாதிபதியைத் தொடர்ந்து பிடித்துக் கொன்று கோட்டையையுமொப்புக் கொண்டார்கள். இந்தச் சமாசாரங்களைக் கேள்விப்பட்ட பரராசசேகரனொளித்தோடி வன்னிக் காட்டுக்குணுழைந்து மறைந்திருந்தான். அவ்வரசனைப் பிடித்துத் தருகிறவர்களுக்கு இருபத்தையாயிர மிறைசால் வெகுமதி கொடுக்கப்படுமென்று பறங்கிகள் தலைவன் விளம்பரப்படுத்தினான்.

அதைக்கேட்டுச் சங்கிலியின் மந்திரிகளிலொருவனாகியவோர் பிராமணன், அரசன்போன குறிப்பறிந்தவனைச் சந்திக்கப் போகிறவன்போல ஒருவிளநீரு மெலுமிச்சபழமுங்கொண்டு வன்னிக்காட்டுணுழைந் தங்கு மிங்குந் தேடிவருகையில், அரசன் கண்டெதிரே வந்துபசாரவார்த்தைகள் சொல்லப் பார்ப்பானவன்கையில் வாளை வாங்கி யிளநீரைவெட்டித்திறந் தெலுமிச்சம்பழத்தை அறுத்துப் பிழிந்துவிட்டுக் குடிக்கக் கொடுத்தான். அரசன் குனிந்து குடிக்குந் தருணத்திற் சண்டாளப் பிராமணனவன் தலையை வெட்ட 'எட்டானைத் தம்பமுடனிசைத்தம்ப நாட்டிய பேரரசன் பட்டான்'. பின்புத்திப் பார்ப்பாரப்பய லத்தலையைக் கொண்டு வந்து பறங்கிக்காரரிடங் கொடுத்துபகாரம் பெறக் காத்துநின்றான். பறங்கிகள் பிராமணனைப் பார்த்து: அரசனைப் பிடித்துத் தருகிறவர்களுக்கன்றிக் கொல்லுகிறவர்களுக்குபகாரங் கொடுக்கப்படுமென்று கூறியிருக்க வில்லையே: நீ அவனைக் கொன்றதுமன்றி அவனுனக்குச் செய்த நன்றியையுங் கொன்றாய். 'ஒருவன் விதைத்ததெதுவோ வதையே யறுப்பான்' என்ற விதிப்படி, உனக்குத்தருமுபகார இதுதானென்று சொல்லி அவன் சிரத்தைக் கொய்தார்கள்.

'என்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு' (குறள்)

'தானே புரிவினையாற் சாருஞ் சுகதுக்கந்
தானேயனுபவிப்பர் தப்பாது. (நீதிநூல்)

## சங்கிலி மரணம்

பின் பறங்கியரசன் சங்கிலியை நீதாசனத்தின் முன்னிறுத்தி விளங்கி யவன் முடிசூட்டி அரசுசெய்யவில்லையென்றும், பிதாவுயிருடனிருக்க அவன் சம்மதமின்றி ஆளுகையை அபகரித்துக்கொண்டு விரோதித்துக் கலகமுண்டாக்கினானென்றும், முடிக்குரிய ராசகுமாரரை அநியாயமாய்க் கொன்றானென்றும், நீதிதவறிக் கொடுங்கோலோச்சிக் குடிகளை வருத்தினானென்றும் அறிந்து கொலைத்தீர்ப்பிட்டுச் சமீபத்திலிருந்த கோவில்வாசலிலவனை நிறுத்திக் கொலை செய்வித்தான். அதையவன் மனைவி கேள்விப்பட்டுத் தானுந் தற்கொலை புரிந்தாள். அவனுடைய பிள்ளைகளைப் பறங்கிகள் தரங்கன்பாடிக்கனுப்பினார்கள். சங்கிலி[12] வாசம் பண்ணின வலய ப்பொழுதுஞ் 'சங்கிலித்தோப்பு' என்றழைக்கப்படுகின்றது. இவனோடாரியச் சக்கரவர்த்திகளி னிராசரீகம் முடிவுபெற்றது.

சிங்கையாரியர்குலத்தோர் சீர்த்தியோடரசியற்றச்
சங்கிலிதனைச் சதித்துத் தட்டினர் பறங்கிக்காரர்
பொங்கியவரசுபொன்றுங் காலம்வந்துற்றபோது
மங்கிய திரிபோன்மாய்ந்து மகத்துவங்குன்றுந்தானே.

**முற்றும்**

---

12. யாழ்ப்பாணச் சரித்திரத்தை எழுதிய ஜோன், யாழ்ப்பாண வைபவமாலை போன்று, யாழ்ப்பாணத்தை அரசாண்ட சங்கிலி செகராசசேகரனையும், சங்கிலி குமாரனையம் ஒருவரென மயங்கி எழுதியுள்ளார்.

கி.பி. 1519 ஆம் ஆண்டளவில் சங்கிலி யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாகினான். இவன் இறுதி வரை யாழ்ப்பாண அரசு, போர்த்துக்கேய அந்நியரின் ஆதிக்கத்தின் கீழ் செல்ல விடாது போராடிய சுதந்திர வீரனாகக் கருதப்படுகின்றான். சங்கிலி ஆரம்பத்திலிருந்து போர்த்துக்கேயரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவனாகவும், அவர்களுடன் தொடர்பு கொண்டோரைத் தண்டிப்பவனாகவும் இருந்தான். தீர்க்கதரிசனமும் கடும் போக்கும் கொண்ட ஆட்சியாளனாக விளங்கியுள்ளான். போர்த்துக்கேயர் 1505 ஆம் ஆண்டே கோட்டை இராசதானிக்கு வந்திருந்த போதிலும் அவர்கள் யாழ்ப்பாணத்துடனான தொடர்பை 1543 ஆம் ஆண்டிலேயே கொள்ள முடிந்தமைக்குச் சங்கிலி மன்னனின் கடும் எதிர்ப்பே காரணமாகும்.

மன்னாரில் மதம் மாறியவர்களையும் மதப் பிரசாரம் செய்த குருவையும், மன்னாரில் அரசில் நிர்வாகியாகவிருந்த இளஞ்சிங்கன் என்பவனையும் சங்கிலி கொன்றமை மதம் பற்றியதன்று. அரசியல் பற்றியதே. மதம் மாறியவர்கள்

போர்த்துக்கேயரின் ஊடுருவல்களுக்கு வழிசெய்பவர்கள் என எண்ணியே சங்கிலி அவ்வாறு செய்தான். சங்கிலியின் நடவடிக்கையானது அரசியல் கண்ணோட்டத்திலும், சம காலத்தில் போர்த்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்களையும் கருத்திற் கொண்டு பார்க்குமிடத்து முற்று முழுதாக நியாயமற்றதெனக் கூற முடியாதுள்ளது என திருமதி. வே. கிருஸ்ணகுமார் கருதுவது ஏற்புடையதே. சங்கிலி மன்னன் எக்கட்டத்திலும் போர்த்துக்கேயரை யாழ்ப்பாண இராச்சியத்தில் நிலைகொள்ளாது தடுப்பதில் முழுக்கவனத்தோடு திட்டவட்டமான கொள்கையோடு இருந்துள்ளான் என்பது அவனது செயல்களிலிருந்து புலனாகிறது.

சங்கிலி மன்னனுக்கும் போர்த்துக்கேயருக்குமிடையில் கி.பி. *1543* இலும் கி.பி. *1560* இலும் யுத்தம் இருதடவைகள் நிகழ்ந்துள்ளது. யாழ்ப்பாண இராச்சியத்தின் மீதான போர்த்துக்கேயரின் மூன்றாவது படையெடுப்பு கி.பி. *1591* இல் நிகழ்ந்தது. இறுதிப்படையெடுப்பு கி.பி. *1620* ஆண்டு நிகழ்ந்தது. இந்நான்கு படையெடுப்புக்களையும் ஜோன் ஒரே படையெடுப்பாகத் தனது நூலில் தவறாக விபரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னாரில் நிகழ்ந்து முடிந்த துயரச் சம்பவத்திற்காகப் பழிவாங்கும் பொருட்டு, கி.பி. *1543* இல் போர்த்துக்கேயப்படை யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டது. இப்படைக்கு மார்ட்டின் அல்போன் சோதெ சௌசா என்பவன் படைத்தளபதியாக வந்தான். அவனது கப்பல்கள் நெடுந்தீவில் ஒதுங்கியபோது பரநிருபசிங்கன் அவனை நாடிச் சென்று உதவிகோரினான். ஆனால் சங்கிலி செகராசசேகரன் வழங்கிய திரவியத்தால் திருப்தியடைந்த போர்த்துக்கேயத்தளபதி படையுடன் திரும்பிச் செல்ல நேர்ந்தது. பரநிருபசிங்கன், சங்கிலி மன்னனுக்குப் பயந்து கோவைக்கு ஓடிச் செல்ல நேர்ந்தது.

இரண்டாம் முறை கி.பி. 1560 இல் கொன்ஸ் தாந்தீனு தே பிறகன்சா என்பவன் தலைமையில் போர்த்துக்கேயப்படை யாழ்ப்பாணத்திற்கு வந்தது. கரையூரில் வந்திறங்கிய பறங்கிகள் படையைத் தமிழர் படை எவ்வளவு எதிர்த்தும், போர்த்துக்கேயரின் படை நல்லூரை நோக்கி முன்னேறுவதைத் தடுக்க முடியவில்லை. நல்லூர் நகர் முழுவதும் பறங்கிப் படையால் சூறையாடப்பட்டது. சங்கிலி மன்னன் கோப்பாய்க்குத் தப்பி ஓடி அங்கிருந்த காவலரணை அடைந்தான். பறங்கிகள் சங்கிலியைப் பிடிக்கும் நோக்குடன் கோப்பாய்க்குச் சென்ற போது, அவன் பச்சிலைப்பள்ளிக்குப் பின் வாங்கிச் சென்றான். போர்த்துக்கேயர் படை தொடர்ந்து போரிடமுடியாத நிலையில், சங்கிலி மன்னனுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள நேர்ந்தது. அந்த ஒப்பந்தப்படி சங்கிலி, போர்த்துக்கேயருக்குத் திறையும், அத்துடன் மன்னார்த்தீவையும் விட்டுக் கொடுக்கவும் ஒப்புக் கொண்டான். இந்த ஒப்பந்தப்படி சங்கிலி மன்னன் திறை செலுத்தியதாகத் தெரியவில்லை. சங்கிலி செகராசசேகரன் *1519* ஆம் ஆண்டிலிருந்து *1565* ஆம் ஆண்டுவரை தானாக மரணமடையும்வரை யாழ்ப்பாணத்தின் சுதந்திர மன்னனாக ஆட்சி புரிந்துள்ளான்.

சங்கிலி செகராசசேகரனுக்குப் பின் புவிராச பண்டாரம், காசிநயினார் அல்லது குஞ்சு நயினார் (1565), பெரியபிள்ளை செகராசசேகரன் (1570), புவிராசபண்டாரம்

பரராசசேகரன் (1616), எதிர்மன்ன சிங்க குமாரன் (1591), சங்கிலி குமாரன் செகராசசேகரன் (1616) ஆகிய ஆறு மன்னர்கள் யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளர்களாக விளங்கினர். யாழ்ப்பாண இராச்சியத்தில் நிகழ்ந்த உண்ணாட்டுக் குழப்பத்தினாலும், போர்த்துக்கேயரின் அரசியல் தலையீட்டினாலும் இந்த மன்னர்கள் நிலையாகத் தொடர்ந்து ஆளமுடியாது போனது.

கி.பி. 1591 இல் போர்த்துக்கேயர் மூன்றாவது தடவையாக, அந்திரே பூர்த்தாடுதேரிமென் டோன்சா என்னும் படைத்தலைவனைப் பெரும் படையுடன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தனர். தமிழர் படையுடன் பறங்கி படை நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கும் வீரமாகாளியம்மன் கோயிலுக்குமிடையில் மோதின. தமிழர் படை தோல்வியைத் தழுவ நேர்ந்தது. பூர்த்தாடு, பெரியபிள்ளையின் மகனான எதிர்மன்ன சிங்கனை மன்னனாக்கி மீண்டான். எதிர்மன்ன சிங்கன் கி.பி. 1616 இல் மரணமடைய சங்கிலி குமாரன் செகராச சேகரன் அரியணையிலமர்ந்து கொண்டான். இவனே யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னனாவான்.

கி.பி. 1620 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரின் இறுதிப் படையெடுப்பு நிகழ்ந்தது. இப்போர்த்துக்கேயப்படையெடுப்புக்கு பிலிப்தே ஒலி வேறா என்பவன் படைத்தலைமை தாங்கினான். இப்படையெடுப்பில் தமிழ் வீரர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டார்கள். சங்கிலி குமாரன் குடும்பத்துடன் சிறை பிடிக்கப்பட்டு கோவைக்கு அனுப்பப்பட்டான். அங்கு சங்கிலிகுமாரன் சிரச்சேதம் செய்யப்பட்டான். சிங்கை ஆரிய அரசபரம்பரை அவனது மரணத்துடன் அழிந்து போனது. பலநூற்றாண்டு காலமாகச் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாத்து வந்த தமிழ் இராச்சியத்தில் கி.பி. 1621 ஆம் ஆண்டு சுதந்திர சூரியன் அஸ்தமித்தது.

